உ
சிவமயம்

# சிசுபால சரிதம்

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிசுபால சரிதம்

இது

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

**ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர்**

அவர்கள் எழுதியது

**பதிப்பாசிரியர்**

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்நூல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

இந்துக் கற்கைகள் பீட

சம்ஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

**ஸ்ரீமதி ஸ்ரீகலா ஜெகநாதன்**

அவர்களது

சேவை நலன்பாராட்டுமுகமாக

வெளியிடப்படுகிறது

**வெளியீடு**

**ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்**

**முன்னேஸ்வரம்**

**சிலாபம்**

**26.09.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சிசுபால சரிதம்** |
| ஆசிரியர் | : | **யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர்** |
| முதற்பதிப்பு | : | **1918** |
| மீள்பதிப்பு | : | **2024** |
| பதிப்பாசிரியர் | : | **பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**<br>**பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்,**<br>**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** |
| பக்கங்கள் | : | **i-iv,1-91** |
| **ISBN** | : | **978-624-5901-29-6** |
| அச்சுப்பதிப்பு | : | **மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்**<br>**இல. 10, முருகேசர் லேன்,**<br>**முத்திரைச்சந்தி, நல்லூர்.**<br>**021 222 9285** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் மஹா கவியின் சிசுபாலவதம் சிறப்புடையது. சம்ஸ்கிருத மஹா காவ்ய மரபில் மாகனது சிசுபாலவதத்தின் படைப்பு உன்னத மானதாகப் போற்றப்படுகின்றது. மாகனது சிசுபாலவதத்தின் கதையினது சாரத்தை யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தைச் சேர்ந்த திருவாளர் அ. குமாரசுவாமிப்புலவர் இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னதாக தமிழில் மொழிபெயர்த்த நூலே இன்று மீள்பதிப்பு செய்து வெளியிடுவதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

சம்ஸ்கிருத பஞ்சமஹா காவ்யங்களுள் மாக கவியின் சிசுபாலவதம் சிறப்புடையது, சொற்செறிவு நிறைந்தது. இம் மஹா காவ்யத்தை கற்கவிழைவோர் சொன்னடை, பொருற்செறிவு, அலங்காரச்சிறப்பு, கவிநயம், யாப்பமைதி, கவித்துவமிருக்கு என்பன தனித்த அடையாளங்களாகும். இத்தகைய சிறப்புடைய சிசுபாலவதத்தின் கதைப்பொருள் மஹாபாரதத்தினும், ஸ்ரீமத் விஷ்ணுயாக விதத்திலும் காணப்படுகின்றன. இருபது அத்தியாயங்களைக் கொண்ட இம் மஹா காவ்யம் சம்ஸ்கிருத மஹா காவ்ய மரபில் தனித்த முத்திரை பதித்துள்ளது. இச் சிசுபாலவதத்தின் சாரத்தை சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் தமிழில் சாரமாக எழுதியுள்ளார். இந்நூல் 1918ல் முதற்பதிப்பாகவும் 1938ல் இரண்டாம் பதிப்பாகவும் சுன்னாகம் தனலட்சுமி பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. சுமார் 106 ஆண்டுகளின் பின்னர் அதே வடிவத்தில் சிசுபால சரிதம் எனும் பெயரில் இந்நூல் வெளிவருகின்றது.

இந்நூல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்திலும் சிரேஷ்ட விரிவுரையாளராக சம்ஸ்கிருத துறையில் முப்பத்திரெண்டாண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெறுகின்ற பெருந்தகை ஸ்ரீமதி ஸ்ரீகலா ஜெகநாதன் இவர்களது அளப்பரிய சேவையினை கௌரவிக்கும் வகையில் பதிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

ஸ்ரீமதி ஸ்ரீகலா ஜெகநாதன் 19.01.1959 ஆம் ஆண்டு மானிப்பாய் கட்டுடையினை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தமது ஆரம்பக் கல்வியை கட்டுடை சைவ வித்தியாசாலையில் கற்றவர். யா/ இராமாதன் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத்தினை சிறப்புப் பாடமாக கற்று வெளியேறிய இவர் பேராசிரியர் வி. சிவசாமி, பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணஐயர், கலாநிதி வி. சிவச்சந்திரன் ஆகியோரிடம் கற்கும் போது பெற்றவர். சம்ஸ்கிருதத்தில் முதகலை மாணிப்பட்டம் பெற்ற இவர் சம்ஸ்கிருத இலக்கணம், சம்ஸ்கிருத காவியவியல், சம்ஸ்கிருத இலக்கியம் ஆகியனவற்றில் அதிக ஆர்வம் கொண்டவர். பல்வேறு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிய ஆளுமையுடைய பெருந்தகையின் சேவையினை கௌரவிக்கும் முகமாக அவர்தம் மாணவர் மரபினராகிய நாம் பெருமிதம் அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமதி ஸ்ரீகலா ஜெகநாதன் அவர்கள் உடல் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டுமென இறையருளை வேண்டுகின்றேன்.

சம்ஸ்கிருத மஹா காவ்யத்தினுள் சிசுபாலவதத்தின் சாரமாகிய சிசுபால சரிதத்தின் ஊடாக ஸ்ரீ கிருஸ்ண சரிதம் எங்கும் பரக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

அந் நூலை இலக்கிய ஆர்வலர்கள் கற்றுப் பயனுறும் வண்ணம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமியின் திருவடிகளில் திரிகரண சுத்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

**பீடாதிபதி,**
**இந்துக்கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

**பிரதான குருவும் தர்ம கர்த்தாவும்,**
**ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,**
**முன்னேஸ்வரம்,**
**சிலாபம்.**
**26.09.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசுபால சரிதம்

இது
யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
**ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர்**
அவர்கள் எழுதியது.

**கு. அம்பலவாணபிள்ளை அவர்களின்**
அனுமதிப்படி

சுன்னாகம்:
தனலக்குமி புத்தகசாலையாரால்
பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு

1938

Copy-right Reserved

3160
CPL
3160
3160 - Acc No
894.811 - Class No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநியாசம்

சிசுபால சரிதம் என்பது, சிசுபாலன் என்பவனுடைய சரித்திரம் எனப் பொருள்படும். சிசுபாலனுவான் சேதி என்னும் தேசத்தைப் பாதுகாவல் செய்த அரசர்களுள் ஒருவன். சரிதம்—சரித்திரம். இச்சரிதம் வடமொழியிலே "சிசுபாலவதம்" என்னும் காவியத்திலும், மகாபாரதம், பாகவதம் முதலிய இதிகாச புராணங்களிலும், தென்மொழியிலே வில்லிபுத்தூரார் பாரதம் முதலியவைகளிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. வடமொழிச் சிசுபாலவதம் இச்சரித்திரத்தையே விரித்துரைக்கின்றது. வதம்—வதைத்தல். இதற்கு மாகம் என்ற மற்றொரு நாமமும் உண்டு. மாகம் என்பது மாகர் என்பவராற் செய்யப்பட்ட காரணம்பற்றி வந்த பெயர். மாகராவர், தக்தகர் என்னும் வசியருடைய புத்திரர் என்றும், போசராசன் சபையிலிருந்த புலவர்களுள் ஒருவர் என்றும் அறிஞர் கூறுவர்.

இந்தச் சிசுபாலவதத்தை வடமொழிக் காவியங்களுள்ளே மகத்துவம் வாய்ந்தது என்றும், பொருளழகு, சொல்லழகு, புணர்ச்சியழகு என்னும் மூவகையழகும் ஒருங்கு மேவிய பெருங்காவியம் என்றும் அறிந்தோர் சொல்லுவர். இக்காவியத்திலே பெருங்காவிய விலக்கணமாகிய அறம், பொருள் முதலியவைகளும், மலை, கடல் நாடு முதலியவற்றின் வருணனைகளும், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவைகளும், மந்திரம், தூது முதலியவைகளும் அலங்காரங்களோடும் அமைத்து விரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அலங்காரங்களுள்ளே உவமை, உருவகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதர்சனம் முதலிய பொருளலங்காரங்களும், சக்கரபந்தம், கூடசதுர்த்தம் முதலிய சித்திர கவிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. உவமையிலே பௌத்தமத விடயம், மாயாவாதமத விடயம், வாகட விடயம் முதலிய பலவித விடயங்களும், இதிகாச புராண கதைகளும், பிறவும் அமைத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவைகளை யெல்லாம் இந்நூல் படிப்பவர் இனிதறிவர். இன்னுஞ், செய்புங் காரியங்களை நல்லோருடன் சேர்ந்தெண்ணிச் செய்யும் முறையையும் அறிவர்; நல்லோரையுந் தீயோரையுங் குணங்களால் அறிந்து தீயோரை வெறுத்து நல்லோரைக் கொள்ளும் முறையையும் அறிவர்; தக்கோரை மதித்தல், சுத்தியம்பேசல், தருக்கின்மை, வறிபார்க்கிதல் முதலியவற்றால் வரும் சுகங்களையும் அறிவர்; பொறாமை, நிந்தை, தற்புகழ்ச்சி முதலியவற்றால் வருந் துயர்களையும் அறிவர்.

இது, தமிழ்மொழி நடைக்கேற்பச் சில விடயங்கள் விலக்கியும் கூட்டியும் மாற்றியும் எழுதப்பட்டது. சில விடயங்கள் பாரதத்திலிருந்து படியெடுத்து எழுதப்பட்டுள இது தக்க தமிழ்ப் பண்டிதர்களாகிய ஸ்ரீமான் த. கைலாசப்பிள்ளை, ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம்பிள்ளை என்னும் இருவராலும் பரீக்ஷைசெய்து சில திருத்தங்களுஞ் செய்யப்பட்டது. இன்னும் இதிற் செய்யறபாலனவாகத் தோன்றுந் திருத்தங்களை அறிவித்தல் அறிஞர் கடன். இங்கே தோன்றும் அருஞ்சொற்கள் சிலவற்றின் பொருள்கள் பின்னே எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசுபால் சரிதம்

## நாரதர் வருகை

உலககாரணராகிய நாராயணமூர்த்தி முன்னொரு காலத்திலே பூவுலகத்திலே பரத கண்டத்திலே வட மதுரையிலே யதுகுல திலகன் வசுதேவன் என்பவனுக்குந் தேவகி என்பவளுக்கும் புத்திரராய்ப் பிறந்து, கிருஷ்ணர் என்னும் பெயரும் பெற்றுப், பற்பலவாகிய அற்புதச் செயல்களைச் செய்தும், விற்பனமான விளையாடல்களைச் செய்தும், வீரச்செயல்களைச் செய்தும், தீரச்செயல்களைச் செய்தும், தீயோர்களைச் செறுத்து நீத்தும், நல்லோர்களை மதித்துக் காத்தும் ஒப்புயர்வற்ற உத்தம புருடராய்த் துவாரகை என்னுந் திருநகரியிலே அரசு வீற்றிருந்தார். அவருக்குக் கண்ணபிரான், வாசுதேவன் முதலிய பெயர்களும் உண்டு.

அந்த நாராயணமூர்த்தியாலே இராமாவதாரத்திற் கொல்லப்பட்ட இராவணன் என்னும் இராக்கதனும், வசுதேவன் தங்கையாகிய சாத்துவதி என்னும் நங்கைக்கும் தமகோஷன் என்பவனுக்கும் புத்திரனாய்ப் பிறந்து சிசுபாலன் என்னும் பெயரும் பெற்றுத், துர்க்குணங்கள் மிக்குப், பலர்க்குந் தீங்கு புரிந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதி என்னுந் தேசத்துக்கு அரசனுமாய், மாகிஷ்மதி என்னும் நகரியிலே அரசு வீற்றிருந்தான். அவனுக்குத் தாமகோஷன், சைத்தியன் முதலிய பெயர்களும் உண்டு.

இவர் இருவரும் இவ்வாறு வீற்றிருக்கும் நாள்களில் ஒருநாள், அங்கங்கே நிகழுங் காரியங்களை அங்கங்கே போய் அறிந்து வந்து அவரவர்க்குத் தெரிவிக்கும் இயல்புடைய தேவமுனிவராகிய நாரத முனிவர் தேவுலகுக்குச் சென்றார். அந்த நாரதமுனிவரை இந்திரன் நோக்கி, எதிர்கொண் டழைத்துச் சென்று, இன்சொல் முதலியவற்றால் இனிதுபசரித்து, ஆசனத்திலிருத்திப் பலவித காரியங்களும் பேசியபின், சிசுபாலன் புரியுந் தீங்குகளையும் தெளிவாக எடுத்துச் சொல்லி, "இச்சிசுபாலனை எப்படியுங் கொல்லுவிக்க வேண்டும். இவனைக் கொல்லற்கு வல்லவர் யாவர் என எண்ணும் போதெல்லாம் கண்ணபிரான் என்னும் நாமமே மனத்திலும் வாயிலும் வருகின்றது. சுவாமீ, நீர் இப்பொழுது பூவுலகிற் போய்த், துவாரகாபுரியிலே வீற்றிருக்குங் கண்ணபிரானைக் கண்டு, சிசுபாலன் புரியுந் தீங்குகளைச் சொல்லிச், சிசுபாலனைக் கொல்லும்படி கேட்கின்றேன் என்பதையும் அவர்க்குச் சொல்லி வருதல் வேண்டும்" என்று வணங்கிக் கேட்டான். நாரதமுனிவரும் நன்று என்று உடன்பட்டு, விடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத், தேவுலகினின்றும் பூவுலகை நோக்கித் துவாரகாபுரிக்கு நேரே இறங்கி வந்தார்.

இறங்கி வருகின்ற நாரதமுனிவருடைய திருமேனியின் செவ்வொளியே பூமிக்கு முதலிற் புலப்பட்டது. அவ்வொளியைக் கண்டார் யாவரும் "ஒளியுருவமான பொருள் ஒன்று மேலே நின்று கீழே வருகின்றது. யாவதென்று தெரியவில்லை. சூரியனுடைய ஒளியோ? அக்கினியுடைய ஒளியோ? சூரியனுடைய ஒளியாயின் குறுக்கே சரிந்து செல்லும்; அக்கினியுடைய ஒளியாயின் மேலே நிமிர்ந்து செல்லும். இந்த ஒளியோ எந்தப்பக்கத்திலும் பரந்து பாய்கின்றது. ஆதலால் இவையிரண்டுமன்று. யாதோ வேறொன்று. அற்புதம்! அற்புதம்!" என்று சிந்தித்துத் திகைக்கும்போது, கண்ணபிரானும் அதனைக் கண்டு பலவகையாக எண்ணினார். முதலிலே யாதோ ஒளியின் திரட்சி ஒன்றென்றும், பின்னர் உருவுடைய பொருள் ஒன்றென்றும், அதன்பின் ஒரு புருடன் என்றும் படிப்படியே வரவர எண்ணி, வந்து கிட்டியவுடனே நாரதமுனிவர் என்று நேரே கண்டார். கண்டவுடனே, கதுமென எழுந்து வணங்கி, இன்சொல்லுங் கூறி, உள்ளே கொண்டுபோய், அருக்கியம் முதலியன கொடுத்து, இருக்கையில் இருத்தி, மனம் வாக்குக் காயங்களால் வழிபாடு செய்தார். நாரதமுனிவருந் தீர்த்தநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளித்து, வாழ்த்துரையுங்கூறி, இருக்கும்படி கட்டளையிடக், கண்ணபிரானும் இருந்து நாரத முனிவரை நோக்கிச் சொல்லுவார்:—

## கண்ணபிரான் வார்த்தை

"பகவானே,

"நீர் இப்பொழுது இங்கே எழுந்தருளிவந்து நமக்கெல்லாம் நற்காட்சியைத் தந்தீர். உமது காட்சி புண்ணியங்களை ஆக்குகின்றது! பாவங்களைப் போக்குகின்றது! உமது மகிமை மனவிருளை நீக்குகின்றது! உமது வருகை நமது தைரியத்தை வீக்குகின்றது! நாமுஞ் செயற்பாலன யாவையுஞ் செய்து முடித்துளேமாயினம். ஆயினும், உமது வாக்குகளையுங் கேட்கும் விருப்புடையேம்" என்றார். அந்த வார்த்தைகளை நாரதமுனிவர் கேட்டு, அகமிகமகிழ்ந்து, கண்ணபிரானை நோக்கிச் சொல்லுவார்:—

## நாரதர் வார்த்தை

"புருடோத்தமரே,

"நீர் முழுமுதற் பொருளாய் நின்று மூவுலகையுங் காவல்புரிகின்றீர்! முனிவர்களுக்குந் தலைவராய் முன்னே நின்று கிருபை செய்கின்றீர்! முத்தியை விரும்பும் பத்தசனங்களுக்கும் முத்தியைக் கொடுக்கின்றீர்! கபிலர் முதலிய யோகிகளுக்குங் காட்சி கொடுத்தீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோரைக் காக்கும்பொருட்டுந் தீயோரைப் போக்கும் பொருட்டும் பல்வகை அவதாரங்களை எடுத்தீர்! பன்றி யவதாரமாய் வந்து கடலின் கீழே போன பூமியை மேலே கொணர்ந்து விடுத்தீர்! நரசிங்காவதாரமாய் வந்து இரணியகசிபு என்னுங் கொடியவனைப் படைக்கலமின்றி நகத்தாற் படுத்தீர்! இராமாவதாரமாய் வந்து இராவணன் என்னும் கடியவனை எய்திப் பத்துத் தலைகளுஞ் சிதறப் பாணந் தொடுத்தீர்! அந்த இராவணன்தானே இப்பொழுது சிசுபாலன் என வந்து, சேதி என்னும் தேசத்துக்கு அரசனுமாய் நின்று, நீதி என்பது சிறிதுமின்றி கிட்டூரஞ் செய்கின்றான். அவனே தேவர்க்கும் அசுரர்க்கும் யாவர்க்கும் நன்மை தீமைகளைச் செய்தற்கேற்ற அத்துணைச் சாமர்த்தியமுடைய வீரன்! பிரமாவின் கட்டளையையும் பொருள் என்று கேளான்; முற்பிறப்பிற் போல இப்பிறப்பிலும் பூமியை வருத்துகின்றான்! இங்கே நின்று யாவரையும் வருத்தவிடாமல் இப்பொழுதே யமலோகம் போக அவனை அனுப்பிவைக்கும்படி இந்திரன் உம்மை இரந்து கேட்கின்றான். இந்திரனும் இடர்நீங்கி முன்போல இனிது வாழவேண்டும்" என்று சொல்லித் தமது வார்த்தைகளை நாரதமுனிவரும் முடித்தார். கண்ணபிரானும் ஓம் என்று சொல்லி உடன்பட்டார். நாரதமுனிவரும் நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து செய்தல்

பின்னர்ச் சிசுபாலன் செயல்களைக் கண்ண பிரான் நினைந்து நினைந்து நெஞ்சம் வருந்தி ஞர். சிசுபாலன்மேற் சீற்றமும் யுத்தத்தின் மேல் ஊற்றமும் மிகுந்தார். சேனைகளோடுஞ் செல்லவேண்டும் என்றும், சென்று சிசுபால னைக் கொல்லவேண்டும் என்றுஞ் சிந்தனை கொண்டார். அந்தச் சமையத்திலே இராஜசூய யாகம் நடத்துவதற்கு நீர் வரவேண்டும் என்று தருமபுத்திரர் அனுப்பிய தூதும் வந்தது. அதற் கும் போதல் அவசியம் என்பதையும் அறிந்து "இப்போது இரண்டு காரியங்கள் எதிர்வந் திருக்கின்றன. அவற்றுள் ஒன்று தேவகாரியம்; மற்றது மித்திரகாரியம். இவையிரண்டும் அவ சியஞ் செய்யப்படவேண்டும். இரண்டையும் ஒரேகாலத்திற் செய்வது எப்படி?'' என் றெண்ணி, ஒன்றுந்தெரியாமல் மனந்தடுமாறித் தெரிந்த முதியோருடன் கலந்தெண்ணித் துணிவுபெறக் கருதிப், பலராமர், உத்தவர் என்னும் இருவரையுங் கூட்டிக்கொண்டு தனி யிடம் ஒன்றிற்போய், அவர்களை இருத்தித் தாமும் இருந்து, தமது கருத்தைச் சொல்லு வார் :—

" மூத்தோர்களே,

"நீங்கள் இப்பொழுது நாம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, நன்றாக எண்ணி, உங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கருத்தையுஞ் சொல்லுங்கள். இப்போது செய்யவேண்டியனவாய் இரண்டு காரியங்கள் எதிர்ந்திருக்கின்றன. ஒன்று தேவகாரியம்; மற்றது மித்திரகாரியம். சிசுபாலனைக் கொல்ல வேண்டுமென்று தேவேந்திரன் கேட்கின்றான்; இது தேவகாரியம். தமது யாகத்துக்கு வர வேண்டுமென்று தருமபுத்திரர் கேட்கின்றார்; இது மித்திர காரியம். இரண்டு காரியத்தையும் ஒரேகாலத்திலே முடித்தற்கு யாது செய்வோம்? இவற்றுள்ளே அவசிய காரியம் யாது? சிசுபாலனைக் கொலைபுரிந்து தேவரிடரைத் தீர்த்தலாகிய தேவகாரியம் அவசியமா? மித்திரராகிய தருமபுத்திருடைய யாகத்தைச் சென்று நின்று நடத்துதலாகிய மித்திரகாரியம் அவசியமா? எது செய்யவேண்டுமென்பது தெரியவில்லை. மெய்யுணர்வுடையோரும் செய்யுங் காரியங்களிலே சிந்தை தடுமாறுவர். பின்னை நாம் துணிவு காண்பது எப்படி? ஆயினும், ஒருவாறு துணிந்த கருத்தையும் உங்களுக்குச் சொல்லுகின்றோம்.

## கண்ணபிரான் கருத்து

"தருமபுத்திரரோ தமது கனிஷ்டர்களாகிய வீமன் முதலிய வீரர்களை அனுப்பி, திக்குகளிலுள்ள அரசர்களையெல்லாம் வென்றடக்கி, அரசிறைகளும் பெற்று அரசர்க்கரசராய் விளங்குகின்றார். இப்பொழுது அவருக்கு மாறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர் ஒருவரும் எழும்பத் துணியார். வீமன் முதலிய வீரரும் துணைவராய் விளங்குகின்றார்கள். எமது துணை வேண்டாமலும் தமது யாகத்தை இடையூறின்றி முடிப்பர். ஆதலால் அவருடைய யாகத்துக்குத் துணைபுரியப் போதல் அதிகம் அவசியமன்று. சிசுபாலனோ எமது பிதாவின் சகோதரி புத்திரன். எமக்கு மைத்துனன். அவ்வுரிமை நோக்கிப் பைய மெல்லப் பார்ப்போமென்று பராமுகமாக அவனை விடலுமாகாது. அவனோ வளர்ந்து மிகுந்துவரும் நோயேபோன்று பகைத்திறன் மிகைத்து வருகின்றான். எமக்குந் துரோகஞ் செய்கின்றான்; பிறர்க்குந் துரோகஞ் செய்கின்றான். பலரும் மனம் பதைத்து வருந்துகின்றனர். எமக்குந் துரோகஞ் செய்கின்றான் என்பதுபற்றி எமக்கொரு மனக்கவலையும் இல்லை. ஐயோ! பாதகன் பலர்க்குந் துரோகஞ் செய்கின்றான் என்றே மனக் கவலைகொண்டு வருந்துகின்றோம். அந்தப் பாதகனால் வருந் துயரம் ஆற்றரிது! ஆற்றரிது! பரிதாபம்! பரிதாபம்!

ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாம்
தோற்றிய கடுவிட மெனினுந் துய்க்கலாம்
மாற்றல ரலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலமிப் புன்மையே.–(கந்தபுராணம்)

"இப்படியெல்லாம் இருத்தலால் சிசுபாலனைக் கொலைபுரிதலாகிய தேவகாரியமே அவசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் என்று கருதுகின்றும். இதுவே நமது கருத்தாகும்" என்று கண்ணபிரான் சொல்லி முடித்தார். அதன்பின் சோடாவதார புருடரும், அறிவாளரும், மூதாளருமாகிய பலராமர் சிசுபாலன் மேலே சீற்றக் குறிப்புத் தோன்றக் கண்ணபிரான் எண்ணியவண்ணஞ் சொல்லுகின்றார்.

## பலராமர் கருத்து

"கண்ணபிரானே,

"இப்பொழுது நீர் சொல்லிய வாக்கியங்கள் சுருக்கமாகத் தோன்றினும் பெருக்கமான பொருள்களைப் பெரிதும் உள்ளடக்கிச் சூத்திரம் போன்று துலங்குகின்றன. உமது கருத்தையே அநுசரித்துச் சில வாக்கியங்களை யாமும் இப்பொழுது சொல்லுகின்றும். அவை சூத்திரப் பொருள்களை விரித்து விளக்கும் பாடியம் எனப்படும் விருத்தியுரை போன்று விளங்குக. கண்ணபிரானே, நீர் சிசுபாலனைக் கொலைபுரியச் செல்லுதலே அவசியம் என்று கருதுகின்றீர். எண்ணித் துணிவு பெருமல் எந்தக் கருமத்திலும் எழும்பலாகாது. வகையற எண்ணிய பின்னே எழுதல்வேண்டும்.

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. —(திருக்குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போர்புரிதற்குப் போக விரும்பும் புருடர் தரும சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நட்பாக்கல், பகையாக்கல், மேற்செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் ஆறுவகைக் குணங்களையும், அறிவுவலி, பெருமைவலி, ஆண்மைவலி என்னும் மூவகை வலிகளையும், அவற்ருல்வரும் மூவகைப் பேறுகளையும், பிறவற்றையும் முற்ற அறிந்திருத்தல் வேண்டும்.

*இனந்தரு சந்திவிக் கிரகம் யானமா
சனந்துவை தத்தொடாச் சிரயந் தானெனும்
மனந்தரு குணங்களோ ராறும் வல்லகோ
அனந்தபூ பாலர்கட் கரச னைவனே. —(இரகுவமிசம்)

"நல்லனவுந் தீயனவும் நாடி உள்ளவாறே சொல்லும் நல்லறிவாளரோடு கூடி ஆராய்ந்தறியும் அறிவாகிய ஆலோசனையை ஆரம்பத்தின் முன்னரே செய்தல் வேண்டும். அவர் ஆலோசித்துச் சொல்லும் வார்த்தைகளையும் அவாவோடு கேட்டல் வேண்டும். அவர் வார்த்தை அவமே போகாமல் நலமேயாகி அறிவையும் வளர்க்கும். . காரியங்களை அறியாத வாசாலகருடைய வார்த்தைகளைக் கேட்டலால் வரும் பயனில்லை. அவர் வார்த்தைகள் இலக்

---

*சந்தி — நட்பாக்கல். விக்கிரகம் — பகையாக்கல். யானம் — மேற்சேறல் ஆசனம் — இருத்தல். துவைதல் — பிரித்தல். ஆச்சிரயம் — சார்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தவறிய அம்பே போல வம்பேயாய்விலக்குண்டு வீணாகும். அறிவாளர் எண்ணிச் சொல்லிய துணிவைத் தாமும் எண்ணியே துணிதல் வேண்டும். துணிந்த காரியத்தை நெடுநீர், மறவி, மடி, துயில்களின்றிச் சடிதியிலே தொடங்கல் வேண்டும்.

> நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
> கெடுநீரார் காமக் கலன். —(திருக்குறள்)

"திரவியம், சேனை முதலியவைகளாலே தமக்குளதாய வளர்ச்சியையும், பகைவனுக்குளதாய தளர்ச்சியையும் நோக்கிப் படையெடுத்துப் பகைவன்மேற் செல்லுதலிலே உள்ளக் கிளர்ச்சியின்றி 'யாம் எழுச்சியும் நிலைபேறும் உடையேம். இப்பகை யாது செய்யும்' என்று மனம் மகிழ்ந்திருத்தல் நலமமைந்த செயலன்று. பகைவனைச் சிறியன் என்று பராமுகஞ் செய்யாமல் வேரோடும் பிடுங்கி விழுத்தல் வேண்டும். வேரோடும் பிடுங்கி வேறொரு தடையுமின்றி மேலே எழுதலே எழுச்சியாகும். வேரோடும் பிடுங்காதொழியின் அப்பகை மென்மெல வளர்ந்து மிகுந்து கெடுக்கத் துணியும். நிலைபேறும் இல்லாதாகும். அபிமானமுடையோர் பகைவனை முற்றாகப் பரிகரித்தே எழுச்சியும் நிலைபேறும் எய்துவர். பகையைச் சிறியதென்று பரிகரியாது விட்டவர் பெரிதும் பிழைபாடு எய்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய பகையெனினு மோம்புத றேற்றூர்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. —(நீதிநெறிவிளக்கம்)

" அந்தச் சிசுபாலன் பிதாவழியால் வந்த உறவுபற்றி இயல்பில் அமைந்த மித்திரனும் இருக்கின்றான். தீங்கு புரியும் திறம்பற்றி இடையில் வந்த சத்துருவாயும் இருக்கின்றான். மித்திரன் என்பதுபற்றிப் பொறுத்து நட்பாக்குவதற்கும், சத்துரு என்பதுபற்றி ஒறுத்துப் பகையாக்குவதற்கும் உரியவனாகின்றான். அவனை எப்படி ஆக்குதல் நல்லது? நட்பாக்குதல் நல்லதா? பகையாக்குதல் நல்லதா? அடிக்கடி தீங்கு புரியும் மிடுக்கனும் இருத்தலால் அவனை நட்பாக்குதல் நல்லதன்று. அவனோ துர்க்குணன். பின்னும் பின்னுந் தீங்கு செய்வான். அவனைப் பகையாக்குதலே நல்லது. உறவாளனாயினுந் தீங்கு புரியுந் துர்க்குணனை ஒறுத்துத் தள்ளல் வேண்டும் என்றும், பகையாளனாயினும் நன்கு புரியுஞ் சற்குணனைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் என்றுந் தருமசாத்திரஞ் சொல்லுகின்றது.

" அவன் உறவாளனாயிருந்தும் சும்மா இருந்தானா? இல்லை. உமக்குத் தீங்கு புரிந்தான். எமக்குந் தீங்கு புரிந்தான். பிறர்க்குந் தீங்கு புரிந்தான். தனக்கு நியமித்த உருக்குமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பாளை உமக்கு மனைவியாக்கி நீர் கொண்ட நாளே தொடங்கி உம்மீது வைரம் வைத்துச் சாதித்து வருகின்றான். நரகாசுரனைக் கொலை செய்தற்கு நீர் சென்ற அந்தச் சமயத்திலும் உம்முடைய துவாரகாபுரியை ஒருங்கே முற்றுகை செய்து பெரும்போர் விளைத்தான். எமது தந்தையார் வசுதேவருடைய அசுவமேத யாகத்தை அழிக்கக் கருதி அங்கே விட்ட குதிரையையுங் கவர்ந்தான். இரைவதக மலையிலே பொழுதுபோக்கின் பொருட்டுப் போயிருந்த யாதவரையும் பிடித்தடித்துக் கயிற்றாற் கட்டிக் காவலிலே இட்டான். வப்புரு என்னும் யாதவனுடைய மனைவியையும் வலாற்காரம் புரிந்து கவர்ந்தான். இப்படியே எண்ணில்லாத தீங்குகள் பலர்க்கும் புரிந்தான். இப்பொழுதுந் தீங்கு புரிந்து வருகின்றான். அந்தோ! இந்தத் துரோகி இருக்கும் வரைக்கும் எங்களுக்குச் சுகம் என்பது கனவிலும் இல்லை. இவனைக் கொலை செய்து துயரை நீக்குதல் அவசியம். இவனுக்குத் துணையாளனாயிருந்த வீரனாகிய சராசந்தனும் முன்னரே வீமசேனன் கையாலே முடிந்துபோனான். இப்பொழுது சிசுபாலனை நோக்கிச் சேனைகளோடுஞ் சேதி தேசஞ் செல்லுதல் நல்லது. சேதிதேசத்து விருக்ஷங்களை முறிக்கும்படி யானைச்சேனைகள் செல்லுக. சிசுபாலனுடைய மாகிஷ்மதி நகரியை முற்றுகை செய்து தடுக்கும்படி யாதவசேனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுக. யாகம் நோக்கி இந்திரப் பிரத்தஞ் செல்லுதல் இப்பொழுது வேண்டாம். தருமபுத்திரர் தமது யாகத்தைத் தாமே செய்யக்கடவர். தேவேந்திரன் தேவுலகைக் காக்கக் கடவன். சூரியன் வானிலே துலங்கக்கடவன். நாம் நமது பகைவரைக் கொல்லக் கடவேம்". என்று பலராமர் தமது கருத்தைச் சொல்லி முடித்தார். முடித்த பொழுதே கண்ணபிரான் கலைகள் பலவுங் கற்றுத்தெளிந்த வித்தக விற்பன்னராகிய உத்தவரை நோக்கினார். உத்தவரும் தமது வித்தியா குருவாகிய வியாழ பகவானைப் போன்று கண்ணபிரானுக்கு முன்னரே நின்று கனிவமைந்த வாக்கியங்கள் கொண்டு துணிவமைந்த தமது கருத்தைச் சொல்லுகின்றார்.

## உத்தவர் கருத்து

" கண்ணபிரானே,

" இப்பொழுது மூத்தோராகிய பலராமர் சொல்லிய வார்த்தைகள் பூரணமடைந்து பொலிந்து விளங்குகின்றன. இங்கே எமது வார்த்தைகளுக்கு இடமில்லை. நீரோ எமது வார்த்தைகளையுங் கேட்க வேட்கை கொள்ளுகின்றீர். தரும சாத்திரங்களைத் தவறின்றிக் கிரமமாய் அறிந்த அறிவாளராகிய உமக்குத் தரும சாத்திரக் கருத்துக்களைத் தழுவி நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் வார்த்தைகள் படித்த பாடங்களை அடிக்கடி படிக்கும் அப்பியாசம் போன்றிருக்கும். அப்படியிருந்தாலும் எமது வார்த்தைகளையும் இங்கே சொல்லி உமது வேட்கையையும் ஒருவாறு முடிக்கின்றோம்.

"வெற்றி முதலிய காரியசித்திகளை விரும்பும் அரசரும் பிறரும் ஆலோசனையையும் முயற்சியையும் அவசியஞ் செய்துகொள்ளவேண்டும். ஆலோசனையும் முயற்சியும் பின்னர் வந்து கைகூடும் பெருமைக்கு முன்னர் வந்து நிற்கும் மூலகாரணங்களாகும். ஆலோசனையே முன்னர்ச் செய்து முடிக்கவேண்டியது. முயற்சிக்கும் ஆலோசனையே மூலம். ஆலோசனையைக் கைக்கொண்டு முடித்தே முயற்சி செய்யவேண்டியது. ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் எக்காரியங்களையும் இளைப்பு என்பதின்றித் தக்காங்கு செய்து தவறாது முடிப்பர். ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதித்துவிட்டு முயற்சியை மாத்திரஞ் செய்யும் மூடர் முடிக்கும் வழி தெரியாமல் முட்டுப்பட்டுக் காரியங்களையும் இடையிற் கைவிடுவர். ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் சரீரத்திலே சிறுகத் தைத்து உள்ளேபோய் உயிரைப் பிரித்துக் கொலைத்தொழில் புரியுங் கூரிய பாணம் போலச் சிறிய முயற்சி செய்து பெரிய காரியங்களையும் பிரயாசமின்றி முடிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதிக்கும் மூடர் எலியைப் பிடித்தற்கு மலையைத் துளைக்கும் மடமகன் போலச் சிறிய காரியத்துக்கும் பெரிய முயற்சிகள் செய்து பிரயாசப் படுவர். ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளர் பொறுமையாளராயிருந்து முயற்சிகளை முற்றாகச் செய்து காரியங்களையுந் தவறாது முடிப்பர். ஆலோசனையைக் கைக்கொள்ளாமல் அவமதிக்கும் மூடர் பயனடைதலிலே அவசியப் பட்டு முயற்சிகளை முற்றாகச் செய்யாமற் குறையாக விட்டுக் காரியங்களையும் இடையிற் கைவிடுவர். ஆலோசனையைக் கைக்கொள்ளும் அறிவாளராயிருந்தாலும் அவதானமே பொருளாக் கொண்டு காரியத்திற் கண்ணாயிருப்பவரே கருதிய பயனுங் கைகூடப்பெறுவர். காரியத்திற் கண்ணாயிருப்பவர் நித்திரையையும் பாரார்; நிந்தையையும் பாரார்; சத்துருவையும் பாரார்; சரீரத்தின் அலுப்பையும் பாரார்; பொழுதையும் பாரார்; போசனத்தையும் பாரார்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். —(நீதிநெறி விளக்கம்)

" காரியத்திலே கண்ணாயிருத்தல் இல்லாதவர் உறுதியான உபாயவழியிலே நிலைபெற்று நின்றாலும் மிருக வேட்டை கருதி ஒளியிருந்துந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயில் புரிந்த வேடன்போலப் பயனிழந்து வருந்துவர். அவரோ பலவழியாலும் காரியத்தைக் கைவிட்டுப் பயனிழப்பர். நித்திரை கொள்ளுவர்; நிந்தையைக் கேட்பர்; சத்துருவைச் சாடுவர்; சரீரவருத்தம் நாடுவர்; பசியை நோக்குவர்; பராக்காயும் இருப்பர்.

"ஆலோசனையின் முடிவாய்த் துணிவுபெற்ற காரியத்திலே தளர்ச்சியின்றி முயற்சி செய்யவேண்டும். முயற்சியின்றி ஒரு காரியமும் முடியாது. முயற்சியினாலே செல்வம் வந்து சேருகின்றது; செல்வத்தினாலே சேனை வந்து சேருகின்றது; செல்வத்தாலும் சேனையாலும் பெறுதற்கரிய பெருமை வந்து சேருகின்றது.

பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே.

—(சீவகசிந்தாமணி)

"முயற்சியே பெருமைக்கும் மூலகாரணம். 'முயன்றால் ஐந்தலை நாகநன் மணியும் பெறலாம்' என்பர். பொறுத்திருந்து செய்யும் பகுதியவாகிய காரியங்களிலே முயற்சியை நிறுத்திப் பொறுத்திருந்து, பின்னர்க் காலம் வந்துழிச் செய்யவேண்டும். "தெய்வந் தானே தரும்" என்று சிந்தனை செய்து, முயற்சியை எப்பொழுதும் கைவிட்டிருத்தல் மூடத்தனம். அறிவாளர் தெய்வத்தையுங் கொள்ளுவர்; முயற்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கொள்ளுவர். சொல்லும் பொருளும் தொடர்ந்து பாட்டாதல் போலத், தெய்வமும் முயற்சியுஞ் சேர்ந்து காரியங்கள் கைகூடும் என் பர். காரியங்கள் காலத்திலே முடிதற்கு முயற்சி வேண்டும். வட்டிலிற் சோறு வாயிற் புகுதற் குக் கையின் முயற்சி வேண்டும்.

"முயற்சிவலி, ஆலோசனைவலி, பெருமை வலி என்னும் மூவகை வலிகளையுந் தரித்திருக் குந் தலைமையாளர், மற்றைத் தலைமையாளர் யாவரும் வந்து பரிவாரமாய்ச் சுற்றி நின்று துணைசெய்யப்பெற்றுப் பூமி முழுதையும் அடைவர்.

*மந்திரம் பிரபுவுற் சாக மாம்வலை
முந்துறு சத்திகண் மூன்று மங்கது
தந்திடு சித்தியுந் தரிக்கு மன்னவற்
கெந்தமா நிலங்கொலோ வெய்தி டாதவே.

– இரகு வம்சம்

" கண்ணபிரானே,

"நீர் இப்போது சிசுபாலன்மேற் போர் செய்யப் போகும் முயற்சிக்கும் ஆலோசனை அவசியம் வேண்டும். போதற்கு முன்னரே உம் மிடத்துள்ள வலிமைகளின் நிலைமைகளையும் அவனிடத்துள்ள வலிமைகளின் நிலைமைகளை

*மந்திரசக்தி—ஆலோசனைவலி. பிரபுசக்தி—பெருமை வலி. உற்சாகசக்தி—முயற்சிவலி. அங்கது தந்திடு சித்தி—மந்திரசித்தி, பிரபுசித்தி, உற்சாகசித்தி என்பன. சித்தி—பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நோக்கவேண்டும். உமக்கும் அவனுக்கு முள்ள காலம் இடம் என்பவற்றின் நிலைமைகளையும் நோக்கவேண்டும். போர்தொடங்கும் நெறி முதலியவைகளையும் நோக்கவேண்டும். இவைகளை யெல்லாம் நோக்காமற் பொள்ளெனப் போருக்கெழுதல் நல்லதோர் செயலன்று.

"அந்தச் சிசுபாலன் அற்பமான ஒரு சத்துரு என்று அவமதிக்கத் தக்கவனல்லன். அவனே போர்த்தொழிற் பயிற்சியிலே கீர்த்தி பெற்ற மகாவீரன். சென்ற போரிடை வென்றியே பெறுந் தீரன். துணைவலியான் மிக்க சூரன். கலங்கா நிலையமைந்த அகங்கார குணதாரன். பல நோய்களையுந் துணையாகப் பற்றி வரும் கயரோகம் என்னும் பெருநோய் போலப் பல அரசரையுந் துணையாகப் பற்றி வருவான். அவனுக்கு அன்பு மிக்க துணைவராய்க் காலயவன், சாலுவன் முதலிய காவலரும் வருவர். உம்மீது வைரம் வைத்திருக்கும் வாணசுரனும் அவனோடு சேருவன். பெருந் துணையுள்ளவர் காரியங்களின் முடிவை விரைந்து காணுவர்.

"அன்றியும் நீர் சென்று நின்று போராடுங் களத்திலே பல அரசர்களும் வந்து கூடுவர். அவனோடு நட்புக் கொண்டிருக்கும் அரசரும், உம்மொடு பகை கொண்டிருக்கும் அரசரும் அவனொடு கூடிவந்து உம்மொடு போராடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனோடு பகைகொண்டிருக்கும் அரசரும், உம்மொடு நட்புக்கொண்டிருக்கும் அரசரும் உம்மொடு கூடிவந்து அவனொடு போராடுவர். தருமபுத்திரருடைய யாகத்துக்குப் போகவேண்டிய அரசருள்ளும் பலர் அங்கே வந்து நிற்பார். அந்த யாகமும் அரசருள்ளே பலரும் போகாமையாற் பங்கப்பாடெய்தும். தருமபுத்திரரும் 'அந்தோ! இந்தப் போரை எழுப்பி எமது யாகத்துக்குப் பங்கம் செய்தீர்' என்று உம்மைக் கொறுகொறுப்பர். சத்துருவில்லாதவர் எனப் பொருள்படுகின்ற 'அசாதசத்துரு' என்னும் பெயரும் பூண்டு இன்றுவரையுஞ் சத்துருவின்றி இருந்த தருமபுத்திரருக்கு இப்பொழுது வந்தடையும் முதற் சத்துருவு மாவீர். அந்த யாககாரியமாகிய பாரத்தை நீரே சுமந்து நிறைவேற்றுவீர் என்று முற்றும் நம்பியிருந்த மித்திரராகிய தருமபுத்திரர் அந்தப் பாரத்தைத் தாமே சுமக்கவேண்டியவ ராவர். ஆகவே அவர் மனமும் வேறுபடும். வலியவராயினுஞ் சத்துருக்களைத் தண்டனையாலே மெல்ல மெல்ல வசமாக்கி இணக்கலாம்: மித்திரர் மனம் வேறுபட்டால் அவரை எதனாலும் இணக்கல் அரிது.

"இனி மித்திர காரியத்திலுந் தேவகாரியமே மிக்கது என்பீர் போலும். அவியுணவாகிய சுவையமுதைத் தமக்குக் கொடுக்கும் யாகத்தை முடித்தல் தேவர்க்கும் பிரியமாயிருக்கும். சத்துருவைக் கொல்லுதலிலே அத்துணைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம் இருக்கமாட்டாது. அவியுணவை விரும்பி யுண்ணுந் தேவர்க்கு அவியுணவு கொடுத்தலால் யாகத்தைத் தேவகாரியம் என்றுஞ் சொல்ல லாம். தேவர்கள் மனம் வெறுத்தற்கு இடமே இல்லை. தருமபுத்திரருடைய மனம் வேறுபடா மையும் பிறவற்றையும் நோக்கிச் சிறிது பொறுத்திருத்தல் நல்லது. பொறுத்திருத்தற்கு வேறே ஒரு காரணமுமுண்டு அதனையுஞ் சொல் லுவாம்.

"அந்தச் சிசுபாலன் குழந்தையாய்ப் பிறந்த பொழுது நான்கு கைகளும் நெற்றிக்கண் ணொடு மூன்று கண்களுங் கொண்டு தோன்றி னன். அந்தக் குழந்தையின் அற்புதமான வடி வைப் பற்பலரும் பார்க்கும்படி அங்கே போயி ருந்தார்கள். யாதவர்களும் போயிருந்தார்கள். நீரும் போயிருந்தீர். தாயாகிய சாத்துவதியான வள் அக்குழந்தையை யாவரும் பார்க்கும்படி எடுத்துவந்து தனித்தனி எல்லார்தமது மடிகளி லும் வைத்தாள். உம்முடைய மடியிலும் வைத் தாள். நீரும் பார்த்தீர். நீர் பார்த்தவுடனே மிகையாயிருந்த கைகளிரண்டும் வீழ்ந்துபோக, நெற்றிக்கண்ணுந் தெற்றெனை நீங்கிற்று. அத னைக் கண்ட சாத்துவதி 'மிகையான இந்த அவய வங்கள் எவனாலே நீங்குமோ அவனே இவ னுக்கு யமனவன்' என்று முன்னமே சொன்ன அசரீரி வாக்கினை அந்நேரமே நினைத்து, மன திலே துயர்கொண்டு, நீரே இவனுக்கு யமனவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நிச்சயஞ்செய்து, புலம்பி அழுது, உம்மை நோக்கி 'அப்பா, இவன் செய்யுங் குற்றங்களை மனத்திலே வையாது பொறுத்தருள வேண்டும்' என்று உம்மை இரந்து கெஞ்சி நின்று கேட்டதும், நீரும் அவள்மேலே இரக்கம் வைத்து 'நூறு குற்றம் வரையும் பொறுத்துக்கொள்வேன்' என்று ஆறுதலான வாக்குக் கொடுத்ததும் உண்டல்லவா? நீரும் நினைத்திருப்பீரே. அந்த வாக்கையும் வாய்க்குமிடம் நோக்கிக் காக்க வேண்டும். வாய்மை தவறலாகாது.

> வாய்மைதப்பி னுர்களிந்த மானிலத்தி லீனராய்த்
> தீமையுற்று மேலுளோரர் பழிக்கவே திரிந்துபின்
> தூய்மையற்ற கும்பியுட் டுளைந்தழுங்கு வாரெனு
> ஆய்மனுப் பகர்ந்தவேத சாகைமுற்று மறையுமே.
>
> —(பிரமோத்தரகாண்டம்)

"காலமும் வந்து கைகூட வேண்டும். அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த கருமங்கள் வாயா. இராசியமாய்ப் போய் உளவறிந்து பராமுகமின்றிக் காரியங்களைப் பார்த்து முடிக்கத்தக்க ஒற்றரையும் கண்கள்போலக் கொண்டு கையில் வைத்திருக்க வேண்டும். ஒற்றரில்லாத அரசியல் எத்துணைச் சிறப்புடைத்தாயினும் பாயிரமில்லாத இலக்கண நூல்போலப் பயன்படமாட்டாது. அந்த ஒற்றர் வழியாலே சத்துருவின் ஆழ நீளங்களின் அளவையும் அறிதல் வேண்டும்; சத்துருவோடு சார்ந்து நிற்குஞ் சனங்களையும் பேதஞ்செய்து பிரித்துவிடவேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும்; கூட்டத் தக்கவர்களைக் கூட்டிக்கொள்ளவும் வேண்டும்.

"இந்திரப் பிரத்த நகரியிலே தருமபுத்திரருடைய இராசசூய யாகத்துக்கு எந்த அரசர்களும் வந்து கூடுவர். உம்மோடு கூடிநின்று பயன் தரத்தக்க அரசர்களை ஒற்றர் வழியாலே அந்தரங்கமாக ஆயத்தமாக்கி, யாகத்துக்கு வருந் தலைக்கீடாக அங்கே வரும்படி செய்து கொண்டு, நீரும் யாகத்துக்கே போகவேண்டும். எங்களுடைய பெரிய காரியத்துக்கும் அங்கே இடம் வரும். சிசுபாலனும் வருவான். அங்கே நீருந் தலைவராய் நிற்பீர். தருமபுத்திரரும் இடையூறின்றித் தமது யாகத்தைக் கிரமமாக முடிப்பர். அங்கே செய்யும் அக்கிர பூசையையும் மிக்க மதிப்போடும் உமக்கே செய்வர். 'அக்கிர பூசைக்கு இவருந் தக்கவரா?' என்று சிசுபாலனும் அவனொடு சேர்ந்த நரபாலரும் பொறாமை கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் நிந்தித்து வாதுக்குஞ் சண்டைக்கும் வருவர். அவரோடிணங்கி அங்கே இருக்கும் அரசருள்ளுஞ் சிலர், சபையையும் பாராது தாறுமாறாகப் பேசிச் சீறி நாய்போலேறிவிழும் தீயவரோடிணங்கியிருத்தல் சாலவுந் தீதாய் முடியும் எனத் தள்ளி உம்மோடு வந்து சேருவர். அப்போது நீர் காட்டும் வீரியம் என்னும் விளக்கொளியிலே விட்டிற்பூச்சி போலே விழுந்து மாரணம் பெற்று மாளக்கடவர்" என்று சத்தமராகிய உத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கருத்தைக்கூறி முடித்தார். முடித்த வுடனே மூவருந் தத்தம் உறைவிடங்களைச் சார்ந்தனர்.

## யாகத்துக் கெழுகை

கண்ணபிரான் உத்தவர் கருத்தையே உறுதியாக்கி யாகத்துக்கே போகத் துணிந்து, மணிமுடி, குண்டலம், வாகுவலயம் முதலிய அணிகலங்களையும் அணிந்து, பொன்மயமான புடைவையையும் உடுத்து, சக்கரம், வில்லு, தண்டு முதலிய படைக்கலங்களையும் எடுத்து யாகத்துக்குப் போக எழுந்தனர். குடைகளும் எழுந்தன. கொடிகளும் எழுந்தன. சாமரைக ளும் எழுந்தன. சங்கநாதமும் எழுந்தன. முரசு முதலிய வாச்சியங்களும் எழுந்தன. அந்தப்புர மகளிரும் எழுந்தனர். கடை காவ லர், படை காவலர் முதலிய அரசியற்றுணைவ ரும் எழுந்தனர். அமைச்சர், புரோகிதர் முத லிய குழுவினரும் எழுந்தனர். அடுத்த நட் பாளர், அந்தணர் முதலியோரும் எழுந்தனர். வேறு மைந்தர், மகளிரும் எழுந்தனர். யானை, குதிரை முதலிய சேனைகளும் எழுந்தன. ஒட் டகம், கழுதை முதலியனவும் எழுந்தன.

இவரெல்லாஞ் சூழ்ந்துவரக் கண்ணபிரா னுஞ் சென்று அங்கே சிங்காரித்து நின்ற சிப் பிரம் என்னுந் தேரிலேறி வீதியில் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் வரும் பவனியை மாதராடவர் யாவரும் பார்த்தனர். மாதருள்ளே சிலர் மேல் வீட்டிலிருந்து பலகணி வழியாற் பார்த்தனர்; சிலர் கீழ் வீட்டிலிருந்து வாயில் வழியாற் பார்த்தனர்; சிலர் தெருக்கருகிற் சென்று நின்று பார்த்தனர்; சிலர் தெருவிற்செல்லும் குதிரையின் வேகத்தைப் பார்த்தனர்; சிலர் தெருவிற் புழுதியளைந்து விளையாடுஞ் சிறுவரை எடுக்க ஓடினர். தம்மைப் பார்க்குஞ் சனங்களையும் நகரச் சிறப்புகளையும் கண்ணபிரானும் பார்த்துக் களித்துக் கோபுரவாயிலையும் கடந்து கிழக்கேயுள்ள பெருந் தெருவிற் சென்றார். சனங்களெல்லாம் ஒன்றோடொன்று முட்டி நெருங்கின.

தோளொடு தோண்முட்டத் தொடையொடு தொடைமுட்டத்
தாளொடு தாண்முட்டத் தலையொடு தலைமுட்ட [டத்
ஆளொடு மாண்முட்ட வாளும்பெண் ணொடுமுட்ட
நீளொளி மணிவீதி *நிரந்தரித் தனசனமே.

—(விநாயகபுராணம்.)

சன நெருக்கத்திலே தேரை மெல்ல மெல்லச் செலுத்திச் சென்றார். செல்லுந் தெருவின் அருகிலே தோன்றும் கடலையும் பார்த்தார். கடற்கரையையும் பார்த்தார். கடற்றிரை கொண்டு வந்து கரையில் வீசும் முத்துக்களையும் பார்த்தார். கடற்கரையிலே இருந்து

*நிரந்தரித்தல்—நெருங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணிகளிற் சென்று வாணிகஞ் செய்யுந் தோணிச் செட்டிகளையும் பார்த்தார். கரையிலே நிற்குந் தென்னமரங்களிலேறி இளநீர் பிடுங்கிக் குடிக்கும் சேனை வீரர்களையும் பார்த்தார். கமுகிலேறிப் பச்சைப்பாக்குப் பிடுங்கித் தின்னும் யானைவீரர்களையும் பார்த்தார். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு மெல்ல மெல்லப் போய் எதிரேவந்த இரைவதகம் என்னும் மலையை அடைந்தார். சனங்களும் அடைந்தன.

## இரைவதக மலைக் காட்சி

இரைவதகமலை எண்ணுக்கமையாத வளங்களாலும், கண்ணுக்கமையாத காட்சிகளாலும், நதி, குளம், மரம், நிழல், முதலிய சௌகரிய சம்பத்துக்களாலும் மிகுந்து பொலிந்து விளங்குதலாற் சனங்களோடும் கண்ணபிரான் அங்கே தங்கி இளைப்பாறி அப்புறம் செல்ல எண்ணினர். அற்புதமான அம்மலையின் வைபவங்களையும் பற்பலவாய அழகுகளையுந் தனித்தனி பார்க்க விரும்பிய சனங்களோடு தாமும் பார்க்க விரும்பினர். "புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்." மலையின் அகலத்தையும் பார்த்தனர்; உயரத்தையும் பார்த்தனர். அடிமலையின் படர்ச்சியையும் பார்த்தனர். கொடுமுடிகளின் அடர்ச்சியையும் பார்த்தனர். கொடுமுடிகளிற் படியுஞ் சந்திர சூரியர்களையும் பார்த்தனர். அடியிற் கிடக்குஞ் சிறு மலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பார்த்தனர். முடியிற் கிடக்கும் முகில்களை யும் பார்த்தனர். கரையெங்கும் பாசி படர்ந்த சுனைகளையும் பார்த்தனர். திரையெங்கும் வீசி வந்த நதிகளையும் பார்த்தனர். வச்சிரம், இந் திரநீலம், மரகதம் முதலிய மகத்துவமான இரத்தினங்களையும் பார்த்தனர். பச்சிலை, மூங்கில், பனை முதலிய மரங்களையும் பார்த்த னர். கம்பளமா, கவரிமா முதலிய மிருகங்களை யும் பார்த்தனர். தம்பம் போலச் சற்றும் அசையாமற் சிலைப் பாறையிற் கிடக்கும் மலைப் பாம்புகளையும் பார்த்தனர். சாதகம், மயில் சாரசம் முதலிய பறவைகளையும் பார்த்தனர். போதுகள் விரிந்த தாமரைப் பொய்கைகளை யும் பார்த்தனர்.

அடியிலே வீழும் அருவிகளையும் பார்த்த னர். புடையிலே ஒதுங்கும் பூஞ்செடிகளையும் பார்த்தனர். செடியின் கீழிருந்து திடீரென எழுந்து கடுகியோடும் முயல்களையும் பார்த்த னர். சிங்கம் முதலிய சில பிராணிகளுக்கு வாசத்தானமான வங்குகளையும் பார்த்தனர். வங்குகளிலும் எதிரொலி தோன்றப் பிளிற் றொலி செய்யும் களிற்றியானைகளையும் பார்த் தனர். இல்லறத்திலே நின்று இவ்வுலக போகங் களை அநுபவிக்கும் போகிகளையும் பார்த்தனர். துறவறத்திலே நின்று அவித்தை முதலிய ஐந் தும் நீங்கி இறைவனைத் தியானிக்கும் யோகி களையும் பார்த்தனர். உணவுக்குரிய வடுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் காய்கனிகளையும் கொடுக்கும் உத்தமமான மரங்களையும் பார்த்தனர். நானபானாதிகளுக்குரிய நறுநீர் கொடுக்கும் நதி குளம் முதலியவைகளையும் பார்த்தனர். நான்கு திசைகளுந் தெரியாது நடுவே மறைவிடமாயிருக்கும் கொடிவீடுகளையும் பார்த்தனர். படுக்க இருக்க வசதியாய்க் கிடக்குங் குகை வீடுகளையும் பார்த்தனர். புதியனவாய்ப் பொலிந்து விளங்கும் படவீடுகளையும் பார்த்தனர். படவீடுகளைப் பக்கங்கள் இரண்டிலும் அமைத்துப் பலவகைச் சரக்குகளையும் வாணிகர் வைத்திருக்குங் கடைவீதிகளையும் பார்த்தனர். விலைச்சரக்குகளையுந் தனித்தனி பார்த்தனர்.

இவைகளையும் இவைபோன்ற பிறவற்றையும் கண்ணபிரான் பார்த்தபின் தமக்கென்றமைந்த படவீட்டிலே தங்கினார். அவரோடும் வந்த அரசர்களும் அடுத்த வீடுகளிலே தங்கினார். ஏனையோர் தத்தமக்கு ஏற்ற இடந்தொறும் தங்கினார். யானை, குதிரை முதலிய சேனைகளும் அங்கங்கே பரந்தன.

## சேனைகளின் செய்கை

சில யானைகள் மதசலத்தின் உட்டணத்தினாலே குளத்திலே புகுந்து வாரி அள்ளி நீரை மேலே வீசி அமிழ்ந்தும் மிதந்தும் அலைத்து விளையாடின. சில ானைகள் முழுகும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீருள்ளே தோன்றும் நிழல்களை எதிரிகளாய் வந்த யானைகள் என்றெண்ணிக் கதுமெனப் பாய்ந்து கறுவொடு சீறின. சில யானைகள் "இவைகளை முரியுங்கள்" என்று பாகர்கள் கற்பித்தபடியே தம்மைக் கட்டுதற்கேற்ற சாகை களையுந் தாமே முறித்துக்கொடுத்தன. கெம் பீரவேதி என்னும் யானை, கொடுக்குங் கவளத் திலும் அடுக்கும் பிடியிலும் ஆசையின்றி, எடுக் குந் தோட்டியையும் தடுக்கும் வார்த்தையையுங் கடந்து வேகங்கொண்டு, பாகனையும் பீறி மிடுக் கொடு நடந்து அடுத்ததோர் வனம் புகுந்தது. சில குதிரைகள் வழி நடந்து வந்த வருத்தந்தீர நிலத்திலே விழுந்து புரண்டுருண்டு நெளிந் தெழுந்தன. சில குதிரைகள் பாளமான கற் பாறைகளிலே மேளதாளம் ஒலித்தலோ எனக் கால்களை வைத்துத் திடுதிடெனப் பாய்ந்து சென்றன. வாகுலிய தேசக் குதிரைகள் சில வேகமின்றி நின்று முகத்தை வளைத்து நிலத்தை மணந்து நாசியுயிர்ப்பாலே தூசுகளை எழுப் பின. ஆரட்டதேசக் குதிரைகளுள் சில சாரத் தியந் தெரிந்த சாரதிகளாலே சாத்திரப் பிர காரஞ் செலுத்தப்பட்டு அற்புதமாக அடிகளை வைத்து வட்டமாக விரைந்தோடின.

சில ஒட்டகங்கள் சிறுத்து நீண்ட கழுத்தை நீட்டித் தழைத்துயர்ந்த மரத்தளிர்களை ஒடித்து வாய்மடுத்துண்டன. ஒட்டகங்களுள் ஒன்று கிட்டவந்த யானைக்குப் பயந்து முதுகிற் சுமந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தையும் கதுமென வீசித் துள்ளிப் பாய்ந்து பொள்ளென ஓடிற்று. அந்த யானையும் ஒட்டகத்துக்குப் பயந்து தோட்டியையும் முறித்துப் பிளிற்றொலி காட்டி ஓட்டம் பிடித்தது. சில ஒட்டகங்கள் வேப்பிலைகளோடு தெரியாமல் வாய்க்குளே புகுந்த மாந்தளிர்களை வெறுத்துக் கக்கின.

தள்ள ரும்பரந் தாங்கிய வொட்டகம்
தெள்ளு தேங்குழை யாவையுந் தின்கில
உள்ள மென்னத்தம் வாயு முலர்ந்தன
கள்ளுநண் மாந்தரிற் கைப்பன தேடியே.

—(இராமாயணம்)

சில எருதுகள் புறத்திலே தரித்தபாரம் போயொழிந்தாலும் வல்வசம் என்னும் புல்லினை வயிறு முட்ட உண்டு, அகத்திலே பாரம் மிகுத்துத் தள்ளாடித் தள்ளாடி மெள்ளமெள்ளப் போய் ஒரு மரத்தினடியிலே படுத்துக் கொண்டு இரைமீட்டன. சில எருதுகள் பாலசந்திரன் போல வளைந்த கொம்புகளை மேலே உயர்த்திக் கோட்டுமண்கொண்டு நதிகளின் புதிய செய்கரைகளையும் இடித்தன. சில தேர்கள் பக்கமலைகள்போலப் பரந்து விளங்கின. சில தேர்கள் ஒலியினாலே களிற்றியானைகளின் பிளிற்றொலிகளையும் அடக்கின. சில தேர்கள் அச்சுகள் முறிந்து தச்சர்களாலே திருத்தப் பட்டன. சில தேர்கள் சில்லுகளாலே பூமியைக் கிழித்து உழுத நிலமாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவக் காட்சி

பொன்னெனத் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பொலிந்து விளங்கும் மரம், கொடி முதலியவற்றாலும், பிறவற்றாலுஞ் சனங்களோடும் கண்ணபிரான் அப்போது நிகழும் பருவம் ஒன்றிலே ஆறுவகைப் பருவங்களையும் வேறு வேறு கண்டார். தளிர்த்துப் பூத்து விளங்குஞ் சம்பகம், அசோகு, முருக்கு, மா, மகிழ் முதலிய மரங்களாலும், குருக்கத்தி, தாமரை முதலிய கொடிகளாலும், பிறவற்றாலும் இளவேனிற் பருவங் கண்டார்; வாகை, பாதிரி, மல்லிகை முதலியவற்றாலே முதுவேனிற் பருவங் கண்டார்; தாழை, கடம்பு, வெட்பாலை முதலியவற்றாலும், வானவில், கார்முகில், மயில் செய்யும் நடனம் முதலியவற்றாலும் கார்ப்பருவங் கண்டார்; வேங்கை, செவ்வந்தி, ஏழிலைப்பாலை முதலியவற்றாலும், வெண்முகில், தண்வளி, வியனதிப் பெருக்கு முதலியவற்றாலும் கூதிர்ப்பருவங் கண்டார்; பனித்துளி, பனிக்காற்று முதலியவற்றாலே முன்பனிப்பருவம் கண்டார்; இலவங்கம், இலோத்திரம், பிரியங்கு முதலியவற்றாலே பின்பனிப் பருவங் கண்டார்.

# பொழில்களிலும் புனல்களிலும் விளையாடுகை

ஆடவரும் மகளிரும் பொழில் விளையாட்டிலே விருப்புடையராய்ப் பொழில்களிற்புகுந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம், கொடி முதலியவற்றிலுள்ள பூக்களையும், போதுகளையும், அரும்புகளையும், தளிர்களையும் கொய்தும் தரித்தும், கொடுத்தும் விடுத்தும், பல்வகை விளையாட்டுக்களையுஞ் செய்தனர். பின்னர்ப் புனல்விளையாட்டிலும் விருப்புடையராய்க் குளம் முதலியவைகளிற் புகுந்து, அவற்றின் ஆழம் நோக்கி அஞ்சியும், கீழே அமிழ்ந்தும், மேலே எழுந்தும், நீரை எற்றியும், தெளித்தும், பல்வகை விளையாட்டுக்களையுஞ் செய்தனர். அப்போது மாலைக்காலமும் வந்தது.

## மாலையுங் காலையும் வருகை

சூரியனும் மேலைக்கடலை நோக்கினன். சீரியரும் மாலைக்கடனை நோக்கினர். மிருகங்களுந் துயிலிடத்தை நோக்கின. பறவைகளுங் கூடுகளை நோக்கின. திக்குஞ் சிவந்தது. செக்கரும் பரந்தது. பகலும் போயிற்று. இரவும் வந்தது. இருளுஞ் செறிந்தது. சந்திரனும் எழுந்தது. தாமரையுங் குவிந்தது. குவளையும் மலர்ந்தது. விண்மீன்களும் விரிந்தன. யாவருந் தத்தமக்கேற்ற இடங்களை எய்தினர்; உண்டனர்; மகிழ்ந்தனர்; உறக்கமும் புகுந்தனர். இப்படியே இரவும் போயிற்று. காலையும் வந்தது. சூதமேரத்திய துயிலெடை நிலையும் எழுந்தது. கீதவாத்திய முரச சங்கநாதமும் எழுந்தது. கோழிச் சேவல் கூவுஞ் சத்தமும் எழுந்தது. தாழித் தோய்தயிர் கடையுஞ் சத்தமும் எழுந்தது. யாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் துயிலெழுந் திதயந் தெளிந்தனர். தேவரை வழிபாடுசெய்து மகிழ்ந்தனர். அரசரும் நால் வகை உபாயங்களை ஆராய்ந்தனர். தாமரையும் மலர்ந்தது. குவளையும் குவிந்தது. வண்டுகளும் மொய்த்தன. இரவும் போயிற்று. பகலும் வந்தது. சந்திரனும் நடந்தது. சூரியனும் எழுந்தது.

## வழியிற் செல்லுகை

சூரியன் எழுந்து தோன்றியபின் கண்ணபிரான் இரைவதக மலையினின்றும் எழுந்து முன்போலத் தம்மைச் சூழ்ந்து சனங்களெல்லாம் பக்கங்களிலே வரத், தேரிலேறி வழிக்கொண்டு சென்று, தேரிலேவரும் காடுகளையும் மலைகளையுங் கடந்தார்; மேடுகளையும் பள்ளங்களையும் கடந்தார்; நாடுகளையும் நகரிகளையுங் கடந்தார். அங்ஙனம் செல்லுமவர் முல்லை நிலத்திலே பசுக்களின் முன்னங்கால்களிலே கன்றுகளைக் கட்டிவிட்டு முட்டிகளை முழங்கால்களில் இடுக்கிக்கொண்டு பால் கறக்கும் இடையர்களையுங் கண்டார்; கொட்டில்களிலே இருந்து கொண்டு கள்ளுக் குடித்துக் குடித்துத் தட்டின்றித் தமது நாமசங்கீர்த்தனம் பாடும் இடையர்களையுங் கண்டார்; கறக்கும் இடையனுக்கு முன்னே பால் குடிக்க விரைந்தோடும் பசுக் கன்றுகளையுங் கண்டார்; கொட்டிலில் இருந்தே எட்டி யெட்டி அடிக்கடி தம்மைப் பார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்குலச் சிறுமிகளையுங் கண்டார்; குறிஞ்சி நிலத்திலே அடிப்பட்ட வழிகளை விடுத்து எதிர்ப் பட்ட பக்கங்களினின்றும் சடுதியாய் மலையி லேறுந் தமது யானைகளையுங் கண்டார்; ஆர வாரத்தோடு செல்லும் யானை முதலிய சேனை களுக் கஞ்சாமற் சாரலிற் கிடக்குஞ் சிங்கங் களையுங் கண்டார்; விருக்ஷங்களின் தாடிகள் போல நெருக்கமாய் ஆங்காங்குத் தூங்குந் தேன் கூடுகளையும் கண்டார்.

இன்னுமவர் மருதநிலத்திலே வயல்விளைவு காக்கும் மகளிரையுங் கண்டார்; பறவைகளை ஓட்டிச் சிறிதுதூரஞ் செல்வதற்குள்ளே மானி னங்களும் வந்து தானியங்களிலே தாவ அங்கு மிங்கும் போய் மனந்தடுமாறும் மகளிரையுங் கண்டார்; கிட்டி வந்து கீழே மறைத்த முள்ளு வேலிக்கு மேலே முகம் வைத்து எட்டி யெட்டி யார் என்று பார்க்குஞ் சேரிமகளிரையுங் கண் டார்; காலிடைச் சிலம்பொலிபோல ஒலிக்குந் தோலடிப் பறவைகளையுங் கண்டார். இக்காட்சி களாலே, கடந்த வழியும் நெடுந்தூரம் என் பதை நினையாராய் அவர் மகிழ்ந்த மனத்தொடும் போய், எதிர்ந்த நதியாகிய யமுனையையுங் கடந் தார். யானை முதலிய நால்வகைச் சேனைகளும் கால்களாற் சென்று கடந்தன. மகளிர் யாவ ரும் மெள்ள மெள்ள வள்ளங்களாற் கடந் தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் கொள்ளுகை

கண்ணபிரான் யமுனையாற்றையுங் கடந்து கிட்டவந்து விட்டார் என்பதைக் கேள்விப்பட்ட தருமபுத்திரர் அவரை எதிர்கொண்டு அழைக்கக் கருதித் தேரிலேறி வழிக்கொண்டு. சதுரங்க சேனைகளோடும் சகோதரர்களோடும் எதிரே வந்தார். இரண்டுபக்கச் சேனைகளும் ஒன்றை யொன்றெதிர்ந்து கங்கையும் யமுனையும் போலக் கலந்து கட்டாயின. ஆயினும், இரண்டு சேனையில் யானைகளும் முரண்டு பகை கொண்டன. கண்ணபிரானும் அவரை எதிர்கொள்ள வருந் தருமபுத்திரரும் சிறிது தூரத்திலே ஒருவரை ஒருவர் கண்டு தத்தம் தேர்களினின்றும் இறங்கினர். இருவருஞ் சற்றே நடந்து போய் ஒருவரை ஒருவர் அணுகினர். அணுகிய உடனே கண்ணபிரான் தருமபுத்திரருடைய அடிகளிலே விழுந்து வணங்கினர். தருமபுத்திரருங் கரங்களாற் புயங்களிலே பிடித்துக் கண்ணபிரானை எழுப்பித் தமது மார்புறத் தழுவினர். தழுவிய பின் கண்ணபிரானும் வீமன் முதலிய வீரர்களைத் தழுவி, இன்சொற்களுஞ் சொல்லிக்கொண்டாடியபின், தருமபுத்திரரோடுரையாடி, அவர் சொல்லின்படியே தேரிலேறி வீற்றிருந்தார். தருமபுத்திரர் முதலிய பாண்டவருந் தேரிலேறினர்.

தேரிலேறியபின் அவர்கள் ஐவரும் ஆர்வமும் அன்புமுடையராய்க் குருவுக் கருகிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றேவல் செய்யும் பரிவின் மிக்க சேடர் போலப் பக்கங்கள் நான்கினும் இருந்து கண்ணபிரானுக்குப் பணிசெய்தார்கள். ஒருபக்கத்திலே வீமனிருந்து சாமரையை வீசினன். மற்றப் பக்கத்திலே அர்ச்சுனனிருந்து வெண்கொற்றக்குடையை விரித்துக் கவித்தான். பிற் பக்கத்திலே நகுலசகாதேவர் இருவரும் இருந்து வேண்டும் பணி புரிந்தனர். முற்பக்கத்திலே தருமபுத்திரரிருந்து தாமே சாரதியாய்த் தேரைச் செலுத்தினர். தேரும் இந்திரப்பிரத்த நோக்கிச் சென்றது. சனங்களும் சென்றன.

## இந்திரப்பிரத்த மெய்துகை

இந்திரப்பிரத்த நகரியோ இந்திரலோகமே போல அளவிறந்த வளங்களாலும் அலங்காரங்களாலும் அழகமைந்து சிறந்து விளங்கிற்று. வீதிகளெல்லாம் பூதூளி பரவாமல் வாசநீர் தெளித்துக் காரகிற் புகையும் கமழவூட்டிச் சீரியவாகச் செய்யப்பட்டு விளங்கின. நெடியனவான தடிகளிலே கட்டி நிமிர்த்தி உயர்த்தப்பட்ட கொடியாடைக ளெல்லாம் படபடென அசைந்து மேகத்தையும் வெயிலையும் மறைத்து விளங்கின. யாகத்துக்கு வருவோர் இருத்தற் பொருட்டமைத்த பாடி வீடுகளெல்லாம் பக்கங்களிலே சேனைகள் சூழ விளங்கின. இப்படி விளங்கும் இந்திரப்பிரத்த நகரியையும் ஒப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் நோக்கி நோக்கிக் கண்ணபிரான் முதலியோர் நண்ணியவுடனே துந்துபி முதலிய மங்கலவாச்சியங்கள் அண்டகோளகையும் அதிரும்படி எங்கும் முழங்கின. பொங்கி எழுந்தோடி இமயக்குகைக்குள்ளே புகும் கங்கை என்னும் மாநதிபோலச் சேனைகளெல்லாஞ் சேர்ந்து நகரிக்குள்ளே போய் எதிரொலி காட்டின. கண்ணபிரான் முதலியோரும் அரசிருக்கை மண்டபத்தின் அருகிற் போயினர்.

## அரசிருக்கை மண்டபம் புகுகை

அந்த மண்டபமோ காண்டவ தகனத்திலே தன்னுயிர் காத்த பாண்டவர்க்குக் கைம்மாறாக மயன் என்னும் தேவத் தச்சன் இமயச் சாரலிலே விந்து என்னும் நீர்நிலையிலே தான் மறைத்துவைத்த வாருடபருவநகர இரத்தினங்களை எடுத்துக்கொண்டு வந்து தனது சிற்பநூல் வன்மையாற் செய்தது.

உம்பாலின் றருவினையே னுயிர்பிழைத்தே
னீர்தந்த வுயிர்க்கு வேறோர்
கைம்மாறு வேறில்லைக் குருகுலம்போ
லெக்குலமுங் காக்கு கிற்பீர்
தெம்மாற வுலகாளுஞ் செங்கோன்மைத்
தராபதிக்குச் சிற்பம் வல்லோர்
அம்மாவென் றதிசயிப்ப வரியமணி
மண்டபமொன் றமைக்கின் றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனுளிவ் வுலகாண்ட விடபருவ
னசுரகுல வேந்தர் வேந்தன்
தானுண்மை யுடன்பொருது தரியலரைத்
திறைகொணர்ந்த தாரா பங்கி
போனுளு மொளிவீசும் பலமணிகள்
விந்துவெனும் பொய்கை தன்னில்
ஆனுமற் கிடப்பனவுண் டவையிதற்கே
யுபகரண மாகு மென்ருன். —(பாரதம்)

இந்திரநீலம், பதுமராகம், சந்திரகாந்தம், மரகதம் முதலிய அரதனங்களால் அமைக்கப் பட்ட அறைகளையுமுடையது. மகத்துவமான இரத்தினங்கள் பளிர்பளீரென ஒளிப்பிழம்பு மிகுத்தலாற் போக்கு வரவு செய்யும் வாயில் களைப் புலப்படாதன வாக்கும் தூண்களையு முடையது; சுவர்களையுமுடையது. இந்த மண் டபத்தை எதிரே நோக்கிக் கண்ணபிரானும் பாண்டவரும் தேரினின்றும் இறங்கி நீண்ட மலைபோன்றுநின்ற கோபுரவாயிலையுந் தாண்டி மெள்ள மெள்ள உள்ளே போயினர். கண்ண பிரானுந் தருமபுத்திரரும் "இங்கே வருக, இங்கே வருக" என்னும் வேண்டுகோளுக் கிணங்கி அங்கே விளங்கிய சிங்காசனம் ஒன் றிலே போயிருந்தனர். மற்றையோர்களுந் தக்கவாறே உபசரிக்கப்பட்டுத் தத்தமக்கிட்ட ஆசனங்களிலே போயிருந்தனர். தம்மிடத்திலே கண்ணபிரான் வந்தார் என்ற சந்தோஷத்தி னலே தருமபுத்திரர் தம்முடைய இந்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்த நகரி எங்கும் மங்கலமான திருவிழாக் கொண்டாடும்படி கட்டளையிட்டார். பாட்டுந் தாளமும் பயில, நாட்டியப்பெண்களாலே சாத்துவிகம் ஆங்கிகம் என்னும் நாட்டியங்கள் இரண்டும் நடித்துக் காட்டப்பட்டன. நாட்டியம் முடிந்தபின் சகலரையும் அறிந்த கண்ணபிரான் தனித்தனி கண்டு கொண்டாடிச் சுவாத்தியமும் வினவி இன்சொற்களுங்கூறி யாவரையும் மகிழ்வித்தார். பெரியவர் என்றுஞ் சிறியவர் என்றும் பேதம் பார்த்திலர். செல்வம் முதலியவற்றாற் செருக்கடையாதவர் சிறியவரையும் பெரியவர் போல மதித்துப் பேசிக் கொண்டாடுவர். செல்வச் செருக்கிலே மிகுத்தவர் சிறிதும் வாய்திறவார்.

இப்படியே யாவரையும் மகிழ்வித்தபின் கண்ணபிரான் தருமபுத்திரரோடும் ஓரிடம் நண்ணி அமிர்தமயமான வார்த்தைகளினாலே அபூர்விகமான பலவித காரியங்களும் பேசி அவரை மகிழ்வித்தனர். அதன்பின் கண்ணபிரானை நோக்கித் தருமபுத்திரர் சொல்லுவார்.

## உபசாரங் கூறுகை

"யாதவகுலப் பிரபுவே,

"உலகத்திலே உயர்ச்சியுண்டாக எண்ணிப் பிறரைப் புகழ்ந்துரைப்போர் பெரும்பாலும் புனைந்துரைகூறும் பொய்ம்மையாளராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நினைந்து கூறும் புனைந்துரைகளும் பொய்யுரைகளேயாம். அந்தப் பொய்யுரைகளை அற்பமேனும் வெட்கமின்றித் தமக்குப் புகழ் என்று தலையசைத்து முன்னிலையிற் கேட்டு முகமலர்ச்சி கொள்வோரும் மூடராவர். நீரோ அவர்போன்றார் ஒருவராகாது பெருங் குணங்களெல்லாம் ஒருங்குநிறைந்த தடங்கடலாய் விளங்குகின்றீர். உம்மைப் புகழ்வோர் ஒருகாலத்தும் புனைந்துரை கூறும் பொய்மையாளர் ஆகார். உம்மைப் புகழ்ந்துரைக்கும் உரைகளும் பொய்யுரைகளாகமாட்டா. நீரும் புகழ்ச்சியுரைகளைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ள மாட்டீர். ஆயினும் உமது மகிமையைச் சொல்லும்படி எமதுளம் விரும்புகின்றது. அதனைத் தடுத்தல் அரிது. முன்னிலையிற் கூறல்பற்றி முகம் கோணச்செய்யினும், மெய்ம்மை அமைந்திருத்தலால் நம்முரையும் கொள்ளற்பாலதேயாம்.

"யாதவகுலப் பிரபுவே,

"மகத்துவம் பொருந்திய உம்முடைய வலிமையினாலே இந்தப் பரதகண்டம் எம்முடைய இராச்சியமாக நெடுங்காலம் நிலைபெற்று வருகின்றது. உம்முடைய கருணையினாலே நாமுந் தருமங்களைத் தேடித் தருமர் என்னும் பேரும் பெற்று வாழ்கின்றாம். அதுமட்டோ! திக்குகளை விசயஞ்செய்து திரவியத்தையுந் தேடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த யாகத்துக்குக் கருணை செய்யக்கடவீர். தூற்ற நெற்பொலிக்குக் காற்று வந்தது போல இந்த யாகத்தில் வந்து நிற்கின்றீர். குற்றங்களாகிய பதர்களெல்லாம் குலை குலைந் தோட, இந்த யாகமும் கிரமமாக முடியும். யாம் தேடிவைத்திருக்குந் திரவியங்களையும் ஏற்று, இந்த யாகத்தையும் நீரே செய்யவேண்டும். நாமும் செய்யவேண்டியவைகளைச் செய்வோம். இங்கேவரும் இடையூறுகளையும் நீரே நீக்க வேண்டும். மேலும் யாம் செய்யவேண்டியவை களைச் சொல்லவும் வேண்டும். மூன்றுலகையும் ஆண்டருளும் முதல்வராகிய நீரே ஈண்டுள்ள எம்மையும் ஆண்டருளும். எம்முடைய சகோ தரரும் யாமும் உம்முடைய சொல்லின்படியே வழுவாதொழுகுவோம்" என்று தருமபுத்திரர் சொல்லினர். அப்பொழுது கண்ணபிரான் அச்சபையிலிருக்கும் அரசர் யாவரும் வேட்கை யோடும் கேட்கும்படி உச்சமான தொனியோ டுஞ் சொல்லுவார்.

## உத்தரங் கூறுகை

" தருமபுத்திரரே,

" நீர் திக்குவிசயஞ்செய்து திரவியந் தேடி னது தக்கதுவாய்த் தலைமையமைந்த உமது நீதியின் பெருமையினாலன்றி எமது வலிமையின் பெருமையாலன்று. உணவுகளை முறைகடவா மல் உண்பவனுடைய பிணியணுகாச் சுவாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் மருத்துவனல் வந்ததென்றுரைத்தல் பொருத்தமாகுமா? இராசசூயயாகஞ் செய்தற்கு உரியவர் யாவர்? அதனைச் செய்தற்கு யான் அதிகாரியல்லேன். இப்பூமி முழுதுக்கும் இராசாவாய் இருக்கும் நீரே அதனைச் செய்தல் வேண்டும். இட்டமான வேறு காரியங்களிலே என்னை நியமித்துவையும். அவைகளை யெல்லாம் தவறுவாராமல் உமது சொல்லின்படியே செய்து முடிப்பேன். இந்த யாகத்தையுங் காவல் செய்வேன். இந்த யாகத்திலே உம தேவலைச் செய்யாமல் அவமதி செய்யும் அரசர் தலைகளை இந்தச் சக்கரம் விரைவிற் சென்று துணித்து விழுத்தும்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட தருமபுத்திரர் கண்ணபிரானை நோக்கி, "யாதவகுலப் பிரபுவே, இந்த யாகத்துக்குப் பாதுகாவலாக நீரிருக்கும்போது எமது பெருமைக்கு மாறாக யாதோர் இடையூறும் வர மாட்டாது" என்று மகிழ்ச்சிகொண்டு யாகத்திலே பிரவேசித்து யசமானராயிருந்தார்.

## யாகஞ் செய்கை

ஓமம் முதலிய யாகக் கிரியைகளைத் தாமே செய்பவராகப் பாவனை பண்ணித் தலைமைபெறும்படி தருமபுத்திரரை நியமித்து விட்டபின் யாகபுரோகிதர்கள் அக்கிரியைகளைத் தாமே செய்தார்கள். தேவர்களை அழைக்கும் மந்திரங்களை நாவிலே அபத்தம் பற்றாமல் உச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய்ச் சொல்லி நெய் முதலிய ஆவுதிகளை யாகாக்கினியிற் சொரிந்தார்கள். சாமவேத ஞானிகள் சத்த சுரங்களோடுஞ் சாமவேதங்க ளைத் தவறாது பாடினர். ஆவுதிகளையெல்லாம் அக்கினியும் நாவினால் உண்டு வேகமாய் எழுந்து சுவாலித்தது. அங்கே எழுந்த புகை திசைக ளைக் கருமையாக்கி முகில்களையுங் கடந்து தேவுல கம் போயிற்று. இந்த யாகக் கிரியைக ளெல் லாம் குற்றமுங் குறைவும் பற்றாது முற்றுங் கிரமமாக முடிக்கப்பட்டன. யாக புரோகிதர்க ளுடைய யூகம் மிகுத்த புத்தியும், தருமபுத்தி ரர் தேடிவைத்த சாமக்கிரிகைகளும் அவை கிரம மாக முடிக்கப்படுதற்குக் காரணமாயின.

யாகம் முடிந்தபின் யாகபதியாகிய தரும புத்திரர் யாக புரோகிதர்களாகிய வேதியர்களை யடைந்து, தக்ஷிணைகளாகத் திரவியங்களைக் கொடுத்து, மனம் மகிழ்வித்துப், பாவம் நீங்கிப் பரிசுத்த ராயினர். வாங்கிய வேதியர்களும் பாவ மின்மையாற் பரிசுத்தராயினர். சந்திர சூரிய ருள்ளவரைக்கும் "இந்த நிலம் முற்றாட்டு" என்று தமது கையாலே சாதனஞ் செய்து வேதியர்க்குப் பூதானமுஞ் செய்தார். சதாசாரப் பயிற்சியும், சாத்திர வுணர்ச்சியும், கோத்திர வுயற்சியும் ஒருங்குவாய்ந்த வேதியர்களை வேறு வேறாக விசாரித்து விசேடமாகக் குறித்துக் கொண்டார். விருந்தராய் வந்த வேதியர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் விருந்தோம்பும் முறையாய் உபசரித்து வேண்டும் பொருளுங் கொடுத்து விடுத்தார். அப்பொழுது உபகாரமாய் அரசர்கள் கொடுத்த உத்தம ரத்தினம் முதலிய உயர்ந்த பொருள்களையும், வாங்குஞ் செயலிலே தமக்கு வாஞ்சையிலதாயினும், கொடுக்குஞ் செயலிலே கொண்ட வாஞ்சையினாலே, வாங்கி வாங்கி வேதியர்க்கே தியாகமாக விருப்பொடுங் கொடுத்தார். அரசர்கள் யாவரையும் வரிசை பெறநோக்கி அவரவர்க்குத் தக்கவாறே உபசரித்து மகிழ்வித்தார். வெற்றியினாலே தாம் பெற்றுக்கொள்ள விட்டுத் தோல்வியடைந்த அரசர் தேசங்களையும் அவர்க்கே மீளவுங் கொடுத்து மனமகிழ்வித்தார். இப்படியே பற்பலவாய பெருங்காரியங்களை ஒருங்குதாங்கி அங்குமிங்கும் போயலைந்தாராயினும் "எங்களுக்கும் பொருள் கிடைக்கும்" என்றெண்ணி அங்கே வந்த யாசகர்களாகிய ஏழைகளை மறந்திலராய் அவர்களையும் மகிழ்விக்கக் கருதினர்.

## யாசகர்க்கீகை

அப்பொழுது தருமபுத்திரர் அங்கே வந்திருக்கும் ஏழைகளாகிய யாசகர்களை நோக்கினர். தாதாவாகிய தருமபுத்திரரை யாசகர்களும் நோக்கினர். வாரத்தோடும் வீரத்தோடும் திரவியங்களை வாரி வாரித் தருமபுத்திரர் வீசினர். வாங்கி வாங்கி யாசகர்களும் வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி மனங்களித்தார். யாசகர்களுக்குந் தரும புத்திரருக்கும் இடையிலே "இவர்க்குக் கொடுக்க வேண்டும், இவர்க்குக் கொடுக்கவேண்டும்" என்ற சொல்லன்றி "எனக்குக் கொடுக்க வேண்டும், எனக்குக் கொடுக்கவேண்டும்" என்ற சொல் எங்கேனும் நிகழவில்லை. கொடுக்கும் போது தருமபுத்திரரிடத்திலே ஆதரவும் அன்பும் இரக்கமும் இன்சொல்லும் அகமலர்ச்சியும் முகமலர்ச்சியும் சாவதானமுஞ் சம்பூரணமாகக் காணப்பட்டன. சீறிவைதலும் வேறுபட்டு நோக்கலும் காலம் போக்கலும் குறைவுபடக் கொடுத்தலும் முகங்கோணலும் மனங்கோணலும் தற்புகழ்ச்சியுஞ் சற்றேனும் காணப்படவில்லை. சற்குணமுடையவர்களுந் துர்க்குணமுடையவர்களுஞ் சமமாகவே திரவியம் பெற்றார்கள். திரவியம்பெற விரும்பி வந்தவர்களுள்ளே திரவியம் பெறாமற் போனவரில்லை. போசனம்பெற விரும்பி வந்தவர்களுள்ளே போசனம் பெறாமற் போனவருமில்லை. சுவாத்தியம்பெற விரும்பி வந்தவர்களுள்ளே சுவாத்தியம் பெறாமற் போனவருமில்லை. ஆண்டு வந்தவர்களுள்ளே வேண்டிட்டால் மகிழ்ந்தவர் அனேகர்.

## அக்கிர பூசை

தானதருமங்கள் முடிந்தபின் சபையாரையும் உபசரிக்கக் கருதிய தருமபுத்திரர் முற்பூசையாகிய அக்கிர பூசைக்குத் தக்கவர் யாவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சபையிலிருக்குந் தக்கோரைக் கேட்டனர். அக்கேள்விக்கு வித்தாரமாக வீட்டுமர் விடைகூறுவார். "தருமபுத்திரரே, பிறர் சொல்லாமலே எல்லாவற்றையும் நீரே அறிவீர். இங்கிருப்போருடைய ஏற்றிழிவுகளையும் நன்கறிவீர். ஆயினுந் தக்கோரையும் கேட்கின்றீர். அதுவும் முறையேயாம். நாமுஞ் சொல்லுகின்றோம்; கேளும். இல்வாழ்வார், பிதா முதலிய பெரியோர், உறவினர், யாக புரோகிதர், மருமக்கள், புவிக்கரசர் என்னும் அறுவகையாருள்ளே ஒருவரே அக்கிர பூசைக்குத் தக்கவராவர் என்று மூதுணர்ந்த முதியோர் சொல்லுவர். இந்தச் சபையிலே இல்வாழ்வாரும் பிறருமாக அந்தணருள்ளும் அரசருள்ளும் பலர் வந்திருக்கின்றனர். இவருள்ளே ஒருவரைத் தெரியலாம். இவரை விட்டுக் குணங்களிற் சிறந்தாரையுங் கொள்ளலாம் என்றும் அம்முதியோர் சொல்லுவர். இந்தச் சபையில் இருக்கும் அந்தணருள்ளும் அரசருள்ளும் பெரியவாகிய கண்ணபிரானே விசிட்ட குணங்களெல்லாம் நிறைந்து விளங்குகின்றார். அக்கிர பூசையையும் அவர் தாமே கைக்கொள்வார் என்று கருதுகின்றோம்.

## கண்ண பரத்துவம்

"மாநுட வடிவத்தோடும் இங்கேவந்து நிற்றல் பற்றி அவரை மாநுடர் என்று முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் கருதல் வேண்டாம். அவரோ அங்ஙங் கெனைதபடி எங்கும் நிறைந்த பரமாத்துமாவின் பங்கு எனப்படும் கூறமைந்த அவதாரப் பேறுடையவர். பூமியின் பாரம் தீர்க்கும்படி மானுட சரீரங்கொண்டார். அவருக்கு அவிச்சை, அக்ங்காரம் முதலிய ஐவகைக் கிலேசங்களும் இல்லை. நன்மை தீமைகளும் இல்லை இன்பதுன் பங்களும் இல்லை. அவரோ எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; தம்வயமுடையவர். பிறப் பில்லாதவராயினும் பிறப்புடையவர் என்றும், சத்திய முடையராயினும் மாயமுடையவர் என் றும், விருத்தராயினும் பாலர் என்றும், பழையவ ராயினும் புதியவர் என்றுஞ் சொல்லப்படும் பண்புமுடையவர். மனம் மொழி மெய்களுக்கு அணுகாத மஹானாயினும் சினம் முதலியன நீங்கிய ஞானிகளுடைய தியான சமாதிகளிலே நணுகுந் தன்மையு முடையவர்.

"மூன்று குணங்களாலும் மூன்று வடிவங் கொண்டு மூன்று தொழில்களையுந் தாமே செய் கின்றார். இராசதகுணந் தழுவிப் பிரமாவாய் நின்று படைக்கின்றார். சத்துவகுணந் தழுவி விட்டுணுவாய் நின்று காக்கின்றார். தமோ குணந் தழுவி உருத்திரராய் நின்று அழிக்கின் றார். படை, கா, அழி என்னும் வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு விரவிப் படைக்கின்றார், காக்கின்றார், அழிக்கின்றார் என்பன போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வினையாய் வழங்கப்படுதலன்றிப் படு என்னும் விகுதியும் நடுவிற் சேர்ந்து படைக்கப்படுகின்றார், காக்கப்படுகின்றார், அழிக்கப்படுகின்றார் என இவர் செயலிலே செயப்பாட்டு வினையாய் வழங்கப்படுதலில்லை. துதி என்னும் வினைப் பகுதியோ விகுதி முதலியவற்றோடு விரவி இவைபோலத் துதிக்கின்றார் எனச் செய்வினையாய் வழங்கப்படுதலில்லை. அது படு விகுதியை நடுவிற் பொருந்தித் துதிக்கப்படுகின்றார் எனச் செயப்பாட்டு வினையாயே இவர் செயலில் வழங்கப்படும்.

"அவர் ஆதியிலே நீரைச் சிருட்டித்து அந்த நீரிலே தம்மாலுண்டாய பொன்மயமான கருப்பத்திலிருந்தும் பிரமாவைச் சிருட்டித்தார். பிரமா பூமியைச் சிருட்டித்தார். ஆதலாற் பூமிக்கும் அவரே காரணர். திருப்பாற்கடலிலே யோக நித்திரை செய்கையில், அங்கே வந்து நித்திரைக்குப் பங்கஞ்செய்த மதுகைடபர் என்னும் அசுரர்களை மூட்டுப்பூச்சியை நசிப்பது போல நசித்துத் தொலைத்தார். வராகாவதாரத்திலே கடற்குள்ளே மூழ்கிக் கீழ்போன பூமியை மேலே எடுத்து நிறுத்தினார். நரசிங்காவதாரத்திலே ஆயுதங்களாற் கொல்லப்படாவரமுடைய இரணியன் என்னும் அசுரனை நகத்தினாலே மார்பைக் கிழித்து வதைத்தார். வாமனாவதாரத்திலே மாவலி என்னும் அசுரனிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து பூமியைக் கவர்ந்து தேவேந்திர னுக்குக் கொடுத்து உபேந்திரன் என்னும் பெயரையும் விளக்கினர். தத்தாத்திரேயாவ தாரத்திலே அத்தியயனஞ் செய்யாது மறந்து விட்ட வேதங்களை மீண்டும் அத்தியயனஞ் செய்யும்படி விதித்தார். பரசுராமாவதாரத்திலே கார்த்தவீரியன் என்னும் பார்த்திவனுடைய ஆயிரம் புயங்களையும் அறுத்து வீழ்த்தினர். இராமாவதாரத்திலே இலங்காபுரிக்கு அரசனய் விளங்கிய இராவணனை அகங்காரமுந் தலை பத்தும் அற்றுவிழும்படி பொருது வீழ்த்தினர். இந்தக் கிருஷ்ணவதாரத்திலே ஐந்தருக்களிலே ஒன்ருய்த் தேவுலகிலே நின்ற பாரிசாதத் தரு வைப் பூவுலகிற் கொடு வந்து அந்தப்புரத்திலே நாட்டினர். சிசுபாலனுடைய நெற்றிக் கண்ணி னையும் தெற்றென மறையும்படி செய்தார். கோபாலராய் நின்று கடத்தற்கரிய பெருமழையி னின்றும் பசுநிரைகளைப் பாதுகாத்தார். பகை யாளரைக் கொல்லும்படி வசுதேவனுக்கு மக வாகி அவதாரஞ் செய்தார்.

"இவ்வாருக அவதாரங்களை எடாமல் மறைந்து நிற்குஞ் சுவாப நிலையிலும் யாகங் களிலே பூசைசெய்யப்படுகின்ருர். இவ்வித மான பெருமையுடைய அந்தப் பரமாத்துமா மாநாடவடிவோடும் இந்த யாகத்திலே உம்மு டைய புண்ணிய விசேடத்தாலே முன்னிலை யிலே வந்து முதல்வராய் நிற்கின்ருர். அக்கிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையையும் அவர்க்கே செய்து இப்புவி நிலைக்கும் வரைக்கும் இருக்கும் மெய்ப்புகழ் பெற்று விளங்க்கக்கடவீர்" என்று வித்தாரமாகச் சொல்லி வீட்டுமர் முடித்தார். வீட்டுமர் வார்த்தையைக் கேட்ட கருமபுத்திரர் அக்கிர பூசையை அவர்க்கே செய்தார்.

## சிசுபாலன் நிந்திக்கை

அக்கிரபூசை கண்ணபிரான்பால் அடைந்த செய்தியைத் தூர்க்குணனாகிய சிசுபாலன் கண்டு மனநிலை திரிந்து பொறாமை கொண்டான். சகிக்க இயலாமல் அவன் மனம் தகதக என்று கொதித்துப் புழுங்கிற்று; கோப வெந்தழல் கொழுந்து விட்டெரிந்தது; மூவுலகும் அஞ்ச முடி யசைந்தது; முன்னிறம் நீங்கி முகங் கறுத்தது; வெண்ணிறம் நீங்கி விழி சிவந்தது; படபடெனச் சரீரம் பதறி நடுங்கிற்று; சளசளென வேர்வை தாரையாய் வடிந்தது. அவன் துடுக்கெனக் கரத்தை எடுத்து அவைக்களம் * அஞ்சத் தொடைக்கண் அடித்தான். தொடைக்கண் அடித்தபின் சடக்கெனக் கிளர்ந்து கடைவரும் முகிலென வெடிபட முழங்கினான். வெடிபட முழங்கி வெட்டெனவான நிட்டூரவார்த்தைகளை வெடுவெடெனச் சொல்லுவான்.

பூபால ரவையத்து முற்பூசை பெறுவார் புறங்காணில்வாழ் கோபாலரோவென் றுருத்தங்கதிர்த்துக்கொதித்தோதினன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபாலிமுனியாதவெங்காம னிகரானகவினெய்தியேழ்
தீவால டங்காத புகழ்வீர கயமன்ன சிசுபாலனே.

சூரன்குலத்தோர் குபேரன்குலத்தோர் சுடர்ப்பாவகப்
பேரன்குலத்தோர் முதலோரிருந்தார்கள் பெயர்பெற்றபேர்
வீரங்கொலோவாகுசாரங்கொலோசெல்வமிச்சங்கொலோ ?
பூரம்பு ராசிப் புவிக்கென்று முதுவோர்கள் பொதுவோர்
கொலோ ? —(பாரதம்)

"குந்தி புத்திரரே,

"பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலிய பற்பல அரசர்களும் மிக்கு நிறைந்த இச்சபையிலே அரசர் வரிசையில் உயர்ந்தவரும், பெரியவர் மதிப்புப் பெறுதவருமாகிய கண்ணபிரானை அக்கிர பூஜைக்குத் தக்கவர் என்று விபரீதமாகவிளங்கி அக்கிர பூசையையும் அவர்க்கே செய்தீர் ! தேவர்க்குக் கொடுக்கும் அவிப்பாகத்தைச் சேரியிற் கிடக்கும் நாய்க்குக் கொடுக்கலாமா ? அக்கண்ணபிரான்மீது மிக்க வாரப்பாடு வைத்திருக்கும் உமக்கு அக்கண்ணபிரானும் தக்கவராகவே தோன்றுவர். தக்கவரல்லர் என்பது சற்றுந் தோன்றாது. வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம் என்பர்.

வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்
ஒரும் வையத் தியற்கையன் றேவென
வீர வேனெடுங் கண்ணி விளம்பினாள்.

—(சீவகசிந்தாமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தியந் தவறமாட்டோம் என்று நித்தியமும் பறை யடிக்கின்றீர். தக்கவரல்லராகிய கண்ணபிரானைத் தக்கவர் என்று கொண்டு சம்மானஞ் செய்தது சத்தியத் தன்மைக்குத் தவறுகாதோ? நடுநிலையாகிய தருமநீதி எங்கே நடந்தது? தருமநீதி யில்லாத உம்மைத் தரும ராசன் என்று உலகஞ் சொல்லும் வார்த்தை தீயவாரமாகிய செவ்வாயை மங்கலவாரம் என்பது போன்ற கபடவார்த்தையேயாம். அக்கிர பூசையாலே அவமானமடைந்த அரசர் யாவரும் யாது செய்யவேண்டும்?" என்று தருமபுத்திரரைக் கடிந்து கூறியபின், வீட்டுமரைக் கடிந்து விளம்புவான்:

"சந்தநு குமாரரே,

"இச்சபையிலே அக்கிரபூசைக்குத் தக்கவர் யாவர் என்பதைத் தருமபுத்திரர் அறியாராயினும் நீரும் அறியாதது பேரதிசயம். இல்வாழ்வார் முதலாக ஆறு பேர்களை அக்கிரபூசைக்குத் தக்கவர் என்று கூறினீரல்லவா? அந்த ஆறுபேருள்ளும் இந்தக் கண்ணபிரான் யாவராவர்? ஒருவருமாகாரே! பின்னர் நீர் இவரைச் சொன்னதற்குக் காரணம் என்ன? இவரை நீர் புகழும் வார்த்தை எவ்வியல்புடையது? மங்கல பாடகருடைய துதிகவிபோன்ற கபடவார்த்தையோ? உமது நரையும் வீண்! அறிவும் வீண்! அவதானமும் வீண்! மூப்பும் வீண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நத்துப்புரை முடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்! எத்துக்கு மூத்தீர்!' எவ்வளவோ உயர்ந்த அரசர் பலர் இங்கே இருப்பவும் அவர்மேலே ஒரு சிறிதும் போகாமல் எவ்வளவோ தாழ்ந்த கண்ணபிரான் மேலே இனிது சென்ற உமது விருப்பம் உயர்ந்த மேட்டு நிலங்கள் பல இருப்பவும் அவைகளையெல்லாம் பாட்டிலே விட்டுத் தாழ்ந்த பள்ளமான நிலத்திற் செல்லும் வெள்ளமாகிய கங்கைக்குப் பிள்ளை நீர் என்பதைச் செங்கை நெல்லிப் பழம்போலத் தெரிவிக்கின்றது. தந்தை வழியை விட்டுத் தாய் செல்லும் வழியைத் தொடருதல் நன்றுதீ தறியாத மிருகங்களின் குணமாகும்" என்று சொல்லியபின் கண்ணபிரானையும் முன்னிலையாக்கிச் சொல்லுவான் :

"கண்ணபிரானே,

"அக்கிரபூசையை அரசவரிசையிற் சேர்ந்த தக்கவர் ஒருவரே பெறவேண்டும். நீர் அதற்கேற்ற நிலைமையுடையீரல்லீர். நீர் யார் என்பதை நீரே ஆராய்ந்துபாரும். பலராமருடைய துணையால் வந்த வலிமையன்றி உமக்கென வேறாயிருக்கும் வலிமை யாது? வலிமையுளேன் என்று தலைமை பேசுகின்றீர். காலயவன் சராசந்தன் முதலிய காவலர்களுக்குச் சாலவுந் தோற்றுத் தலைமையிழந்தீர். அப்பொழுது உமது வலிமை ஆரிடம் போயிற்று? சத்தியன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுசூதனன், சக்கரதரன், விக்கிரமன், நிர்க்குணன், ஸ்ரீபதி, நரகவிசயன் முதலிய நாமங்களை உலகத்தார் உமக்கு வழங்குவர். சத்தியன் என்பது நக்கினசித்துவின் புத்திரியாகிய சத்தியபாமையைப் பத்தினியாய் வைத்திருத்தல் பற்றி வந்த நாமம். மதுசூதனன் என்பது தேனீக்களை நீக்கித் தேனழித்தலால் வந்த நாமம்; மது என்பவனைக் கொன்ற காரணம் பற்றி வந்த நாமமன்று. சக்கரதரன் என்பது பகைவர்க்குப் பயந்த சேனையைத் தரித்தல்பற்றி வந்த் பெயர். (சக்கரம் - சேனை) சக்கராயுதமுடையவன் என்பது தகுதியன்று. விக்கிரமன் என்பது விண்ணிலே அடிவைத்ததால் வந்த நாமம்; வீரமுடைமையால் வந்த நாமமன்று. நிர்க்குணன் என்பது மானுட சரீரத்துக்குரிய வீரம், வலி முதலிய குணங்கள் இன்மைபற்றி வந்த நாமம்; முக்குணங்களையும் கடத்தலால் வந்த நாமமன்று. குணங்களைக் கடந்தீராயின், முக்குணங்களையும் விடும்படி முயலுவதென்னையோ? குணங்கடந்த ஒருவர்க்கு அக்கிரபூசை யாது பயன் செய்யும்? மொட்டந்தலைக்குச் சீப்பு யாது செய்யும்? ஸ்ரீபதி என்பது ஸ்ரீ என்னும் பெயருடைய இலக்குமிக்குப் பதியாயிருத்தல் பற்றி வந்த நாமம்; இராச்சிய லக்குமியுடைமை பற்றி வந்த நாமமன்று. நரகவிசயன் என்பது இவன் பாவங்கள் இன்மையாலே நரகத்தையும் வென்றவன் என்றே உலகம் அறியவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வைத்த ஒரு நாமம்; நரகாசுரனை வென்ற காரணம்பற்றி வந்த நாமமன்று" என்று கோமாளமும் கொடுமையுந் தோன்றக் கண்ணபிரானைக் கடிந்து கூறியபின், சபையி லிருந்த அரசரையும் முன்னிலையாக்கிச் சொல்லுவான்:

"அரசர்களே,

"இந்தச் சபையிலே சிங்கவேறுபோல நீங்க ளெல்லீரும் பார்த்துக்கொண்டிருக்கவும் உங்களை ஒரு சிறிதும் பாராமல் காட்டு நாயை மதித்து அவிப்பாகங் கொடுப்பவர்போல அந்தக் கண்ண பிரானை இந்தத் தருமபுத்திரர் நன்குமதித்து அக்கிரபூசை செய்தாரே! இச்செயல் உங்களுக் கெல்லாம் பேரவமானம் என்பதை நீவிரறியாத தென்? அந்தக் கண்ணபிரான் எருத்து மாட்டு வடிவமாய் உருத்துவந்த அரிட்டன் என்னும் அசுரனைப் பிடித்தடித்து வதைத்து முடித்த கொலையாளர்; தொட்டுப் பூசை புரிதற்கேற்ற சுத்தியாளரல்லர். மாடடிக்குஞ் சண்டாளர் தேகம் அழுக்கு மலிந்து அருவருப்பாய் இருக் கும். சீ! சீ! அருவருப்பு! கண்ணபிரான் குழந்தையாய் இருந்தபோது பால்குடிக்க அழு வதைப் பார்த்து முலைசுரந்து பால் கொடுத்த பூதனை என்னும் மாதையும் வேதனை செய்து கொன்றார். அவள் ஒரு பெண்ணென்று இரங்கா தொழியினும் முலைசுரந்து பால்கொடுத்த முலைத் தாய் என்று மனமிரங்க வேண்டாமா? கொடிது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிது! கண்ணபிரான் தம்மை ஏவலராகக் கைக்கொண்டு பசுக்காவலிலே வைத்துப் பாது காத்து வந்த மாமனாகிய கஞ்சனையும் வதைத் தார். கஞ்சன் தலைவனும் கண்ணபிரான் அடிமையும் அல்லவா? தமக்குத் தலைவனாயிருந்த கஞ்சனை ஏவலராய் நின்ற இவர் எப்படிக் கொல்லலாம்? பாவம்! பாவம்! கண்ணபிரான் வலிமை யற்ற சகடாசுரனை உதைத்து வதைத் ததும், கோவர்த்தனம் என்னும் சிறு மலையைக் குடை என்று சற்றே உயர்த்தினதும், வைர மில்லாத மருதமரத்தை இருபிளவாக முரித் ததும் தைரியமான வீரர்களுக்கு அதிசயமான செயல்களாகா!"

அண்டர்க் கெல்லா மரசான வாகண் டலனுக் கண்டரினி
துண்டற்கமைத்தபாலடிசிலுண்டா னொருநாளொருதானே
கொண்டற்கன்மாரியைமுன்னங் கோவர்த்தனமேகுடையா
[கச்
சண்டப்பிரசண்டவேகமுடன்றடுத்தானேமுபடுத்தானே.

மஞ்சனொனறு மாமனொடு காளையமர் விளைத்தான்
வஞ்சனையி னலமரு மெத்தனை மலைந்தான்
தஞ்சமெனே வேமருவு தமரிலொரு தானே
விஞ்சிவிர காலுரிய மேதினி புரந்தான். — (பாரதம்)

இந்தவாறே நிட்டூரமான நிந்தைகளைச் சொல்லிவிட்டு நரகாசுரன் புதல்வன் வேணு தாரியோடு கூடி நின்று கைத்தாளந் தட்டுதல் போலக் கைகொட்டி அட்டகாசஞ் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைநோக்கிய யதுகுல வீரர்களுஞ் சிசுபாலன்மேற் சினந்திருகி எழுந்தார். அவரைக் கண்ணபிரான் தடுத்து, "நூறுகுற்றம் பொறுப்பேன்" என்றதை நோக்கி "நிந்தைகளில் எத்தனை நிறைவேறிற்று" என்று சிசுபாலன் சொல்லும் நிந்தைகளைச் சிந்தையிற் கணித்து வந்தார். நிந்தையாலே சிந்தை திரிந்து வேறுபட்டாரல்லர். வீட்டுமரோ "சாது நிந்தை தாங்கலாற்ருது" என்று சிந்தை வேறுபட்டுக் கரை கடந்துவரும் கடல்போல முழங்கி கம்பீரமாயுந் தைரியமாயும் பேசுவார். "இச்சபையிலே யான் செய்வித்த அக்கிர பூசையிலே உக்கிரமும் பொருமையுமுடையவன் இக்கணம் எழுந்து வில்லு வளைக்கக் கடவன். எல்லா அரசர்கள் சிரசிலும் இந்தப் பாதம் வைக்கப்பட்டது" என்ருர்.

இப்படி வீட்டுமர் கூறிய வார்த்தையைக் கேட்ட சிசுபாலன் பக்கத்தாராகிய அரசர் யாவரும் அளவுக்கு மேலே கோபங்கொண்டார்கள். துருமன் என்பவன் கோபத்தினுலே தேகம் எங்குஞ் சிவந்து வேருெரு நச்சுமரம் போல விளங்கினன். வேணுதாரி என்பவன் காற்றினுலே தீப்பற்றி எரியும் மரம்போலப் பெரிதும் விளங்கினன். உருக்குமிணன் என்பவன் தனது தங்கை உருக்குமிணியைக் கண்ணபிரான் கவர்ந்தபோதெழுந்த கோபத்தோடே இப்பொழுது எழுந்த கோபமுஞ் சேர்ந்து மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமுடையவனாய் விளங்கினான். வசு என்னும் அரசன் கோபத்தினாலே மேலே கிளம்பிச் சிலை தடக்கிக் கீழே விழுந்தான். இப்படியே கோபங் கொண்டவராய்ச் சிசுபாலன் பக்கத்தரசர் யாவரும் வேகத்தோடும் போருக்கெழுந்தார்கள். வீட்டுமரையும் மதித்திலர்; தருமபுத்திரரையும் மதித்திலர். கண்ணபிரானை மெல்லியதான ஒரு புல்லைப்போல எண்ணினர். அப்பொழுது சிசுபாலன் எழுந்து படம் விரித்தாடும் பாம்பு போலச் சீறிச், சடலம் நடுநடுங்கிக், கண்களினின்றும் பொறிகள் பறக்க நின்று, விடம் போன்ற சொற்களை விளம்புவான்:

"அரசர்களே,

"சோர புத்திரர்களாகிய பாண்டவரையும், வயதுசென்ற கிழவனாகிய வீட்டும சந்நாசியையும், கஞ்சனுடைய ஏவலாளனாகிய கண்ணபிரானையும் நீவிர் இன்னுங் கொல்லாதிருத்தல் என்னையோ? இந்தக் கண்ணபிரான் போர்முகத்திலே வந்து என் முகத்துக்கெதிரே ஒருகாலமும் நிற்கமாட்டார். இவரைக் கொல்லுதல் அரியகாரியமன்று. இவரை அக்கிர பூசைக்குத் தக்கவர் என்று தெரிந்தெடுத்த வீட்டுமருந் தருமபுத்திரரும் யுத்தமாகிய உரை கல்லிலே இவரையும் என்னையும் வைத்து உரைக்கையாகிய பரீக்ஷை செய்து பார்க்கக்கடவர். பார்க்கும்போது தக்கவர் யாவர் என்பதும், தகவிலர் யாவர் என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்கும் புலப்படும். என்னுடைய பாணங்கள் குடித்துக் கழித்துவிட்ட இவருடைய இரத்த மாகிய எச்சிலைப் பறவைகளும் பூமியும் விரை விலே பருகுக" எனச் சொல்லித் தருமபுத்திரர் தடுப்பவுங் கேளானாய்ச் சபையை விட்டு வெளி யிற் போனான். அவன் பக்கத் தரசரும் போயினர்.

பொறுமையுங் கருணையும் பூண்டவர்களா கிய பாண்டவர்கள், கொடிய நிந்தைகள் கூறின னாயினும் சிறிய சிந்தையனான சிசுபாலனைக் கடியவும் நினைந்திலர்; காதவும் நினைந்திலர். சிறிய தாய் பெற்ற புதல்வன் என்றும், விருந் தினனாய்த் தம்மை அடைந்தவன் என்றும் நினைந்தனர். வெளியிற்போன சிசுபாலன் வேக மான குதிரைகள் பூண்ட தேரொன்றில் ஏறி, வேறொரு தெருவாற்போய்ப் பாளயஞ்சேர்ந்து, சேனைகளை ஆயத்தஞ் செய்தான். போர்ப் பறையும் முழங்கிற்று. போர்வீரருங் கவசந் தரித்துப் போருக்குப் புறப்பட்டார். யானை முதலியனவும் புறப்பட்டன. அபசகுனங்களும் நிகழ்ந்தன. போருக்குப் போகும் புருடன் ஒருவனை மறிக்க வந்த மங்கை ஒருத்தியின் செங்கையிலிருந்து திடீரெனத் தவறி வெண்கலப் பாத்திரம் ஒன்று கீழே வீழ்ந்தது. பெண்கள் சிலருடைய கண்களிலிருந்து தாரையாக நீர் பெருகிற்று. மாதாவினாற் கடியப்பட்ட மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன், எழுந்து போகுந் தாதையைநோக்கித், 'தாதையே, எங்கே போகின்றீர்' என்று வினவினன்.

எழுச்சிக்கட் பிற்கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறிரோ வென்ஞரே முன்புக்
கெதிர்முகமா நின்று முரையா ரிருசார்வுங்
கொள்வர் குரவர் வலம். —(ஆசாரக்கோவை)

இப்படியே பற்பல அபசகுனங்கள் அப்பொழுது நிகழ்ந்தன. போருக்கு ஆயத்தம் புரிந்த சிசுபாலனும் தூதுக்கு வல்லவனொருவனை அழைத்துக் காரியங்களைச் சொல்லிக் கண்ணபிரானிடம் அனுப்பினன். அவனும் அச்சபையில் வந்து கண்ணபிரானை முன்னிலையாக்கிப் புகழ்தலும் பழித்தலுமாகப் பொருளிரண்டமைந்த வாக்கியங்கள் கொண்டு வந்த காரியஞ் சொன்னன். சொன்னதைக் கண்ணபிரானுங் கேட்டுக்கொண்டு பாங்கரிலே நின்ற சாத்தகியைப் பார்த்தார். பார்த்தகுறிப்புணர்ந்த சாத்தகியுந் தூதுவனை நோக்கிச் சொல்லுவான்.

## சாத்தகி வார்த்தை

"தூதுவனே,

" நீ கூறிய வாக்கியங்கள் சிலேடையாய் நின்று புறத்திலே புகழ்தலும் அகத்திலே பழித்தலுமாக இருபொருள்கள் தருகின்றன. புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை எடுத்தலும் பழித்தலை விடுத்தலும் பெரியோர் நெறியாகும். அரசர்க் கரசராகிய தரும புத்திரர் கண்ணபிரானுக்குச் செய்த அக்கிர பூசையிலே நின் சிசுபாலன் கொள்ளும் பொறாமையாலே நேரும் பயன் யாது? பரிமளமான பூவைச் சிரசிற் சூடுஞ் செயலிலே பொறாமை கொள்ளும் புருடரு முளரோ? பொறாமை கொள்ளும் புருடர் பெரியவரா? சிறியவரா? பெரியோர் பிறரடையும் பெருமையிலே சிறிதும் பொறாமையின்றி மனம் மகிழ்ந்திருப்பர். அகத்தொருகால் வெறுப்பிருந்தாலும் புறத்திற் காட்டார். சிறியோர் பிறரடையும் பெருமையிலே பொறாமைகொண்டு மனம் புழுங்குவர். அகத்துள்ள வெறுப்பையும் புறத்து வீசிப் போருக்கு மெழுவர். பெரியோர் பொறாமையினாலே பொல்லாங்கும், பொருட்கேடும், மனக்கவலையும் வரும் என்பதை என்றும் நினைப்பர். சிறியோர் பொல்லாங்கு வருதலையும் நினையார்; பொருட்கேடு வருதலையும் நினையார்; மனக்கவலை வருதலையும் நினையார். பெரியோர் பிறர்க்குபகாரங்களைப் பிரயாசத்தொடுஞ் செய்து பெறற்கரும் பெருமையைச் சிறப்பொடும் பெறுவர். சிறியோர் பிறர்க்கபகாரங்களை மறத்தொடுஞ் செய்து பகைக்கிடையசிறுமையை நகைப்பொடும் பெறுவர்.

"பெரியோர் பிறர்வசை கேட்டலிற் செவிடராயும், பிறர் வசை பேசுதலிலே மூகராயும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் குற்றங்களிலே குருடராயும், பிறர் பெருமை பேசுதலிலே வாயுளராயும் இருப்பர்.

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா வவற்கு. — (நாலடியார்)

"சிறியோர் பிறர் குற்றங்களிலே கண்ணுள்ளவராயும், தங்குற்றங்களிலே கண்ணில்லவராயும், பிறர் பெருமையிலே மூகர்களாயும் இருக்கின்றனர். பெரியோர் சிறியோராற் சொல்லப்படும் பழிமொழியைக் கேட்டு மறுமொழியாக ஒரு மொழியேனுஞ் சொல்லார்.

கூர்த்துநாய் கவ்விக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கவ்வினா ரீங்கில்லை — நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு. — (நாலடியார்)

"பெரியோரான கண்ணபிரான் சிறியோனான சிசுபாலன் சொன்ன பழிமொழிக்கொன்றேனும் மறுமொழி பகர்ந்திலர். குறுநரிகளின் சிறுகுரல் கேட்டுக் கொறு கொறுக்குஞ் சிங்கங் குரல்காட்டாது. சிசுபாலன் கூறிய சிறு மொழிகளாற் கண்ணபிரானுடைய கௌரவஞ் சிறிதுங் குறைவடையாது. மண்ணின் துகள் மறைத்தாலும் மணியின் பெருவிலை குறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் பெரியோர்கள் தமது வாய்களாலே தமது கீர்த்திகளை ஒரு காலமுஞ் சொல்லார். பெரியோர் தம்மைத் தாம் புகழ்தலிலே சாமர்த்தியமுடையவரல்லர். பெரியோருடைய கீர்த்திகளைப் பேசிக்கொண்டாட உரியோராய் உலகத்திலே எத்தனையோ பலருளர். சிறியோர் தமது கீர்த்திகளைச் சிறிதும் நாணமின்றித் தமது வாய்களால் தாமே சொல்லுவர். சிறியோர் தம்மைத் தாம் புகழ்தலிலே சாமர்த்தியமுடையவர். சிறியோருடைய கீர்த்திகளை எடுத்துச் சொல்லிக் கொண்டாட இரண்டாம் புருடராக உலகத்திலே ஒருவருமில்லை. இரண்டாம் புருடர் கிடையாமையே அவர்கள் தமது கீர்த்தியைத் தாமே சொல்லற்குக் காரணம்.

சடமதைக் கழுவ வன்னிச் சகதியிற் றோய்தல் போலும்
சுடரினைத் தூண்ட வேண்டி யூதியே தொலைத்தல் போலும்
மடமையாற் றன்னைத் தானே புகழுவோன் வசைகளெல்லாம்
புடவியே யெடுத்து ரைக்கப் பூணுவ னிந்தை யம்மா.

— (நீதிநூல்)

"பெரியோர்கள் கோபதாபத்தை வெளியிற் காட்டாமல் மறைத்துக்கொண்டு பகைவரை வெல்லக் காலமும், இடமும் நோக்கி வாளா இருப்பர். சிறியோர் ஒன்றையும் நோக்காமல் முரசப்பறைபோல ஆரவாரஞ் செய்து கொறு கொறுத் தெழுவர். அவர்க்கு வாக்குச்சாரமன்றி வாகுசாரமில்லை. நின் சிசுபாலனுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தானே புகழ்ந்துகொண்டு போருக்கும் ஆரவாரஞ் செய்கின்றான்.

" தூதுவனே,

" நின் சிசுபாலன் இங்கே யாது கருதி வருகின்றான்? நட்புக்கருதி வருகின்றானா? பகை கருதி வருகின்றானா? நட்புக்கருதி வருகின்றானாயின், போருக்காயத்தம் புரியமாட்டான். பகை கருதி வருகின்றானாயின் வரக்கடவன். வந்தானாயின், விளக்கிலே வந்து வீழ்ந்திறக்கும் விட்டிற் பூச்சிபோல விரைவிலே விநாசமாவன். சிசுபாலன் வழியாலே சேர்ந்து நூறுகுற்றம் பூரணமாதலைக் கண்ணபிரான் கருதியிருந்தார். தூதனாகிய உன் வாயால் வந்த நிந்தைகளுஞ், சிசுபாலன் வாயால்வந்த நிந்தைகளுஞ் சேருதலால் அந்த நூறும் நிறைவாயின" என்று சாத்தகி சொல்லத், தூதுவன் பின்னர்க் கண்ணபிரானை நோக்கிச் சொல்லுவான்.

## தூதுவன் வார்த்தை

" கண்ணபிரானே,

" அறிவிலராகிய சிறியோர் நன்மை பயக்குஞ் செயல்களைப் பிறர் அறிவித்தாலன்றித் தாமாக அறிந்துகொள்ளமாட்டார். தமது துணிவே பெரிதெனச் சாதிப்பர். அறிவுளராகிய பெரியோர் பின்வருந் தீங்குகளை முன் வரைந் தெண்ணித் தாமாகவே அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவர்; அறிந்தாரைக்கேட்டும் அறிவர். நாம் இப்பொழுது சொல்லிய நட்புப் பகை என்னும் இரண்டனுள்ளே யாது தக்கது என்பதை நீரும் அறிந்து கொள்ளும். அறிந்து துணிந்ததை விரைந்து செய்யும். நும்போலிய அறிவிலிகள் குற்றங்களையுங் குணங்களையுஞ் சற்றும் ஆராய்வதில்லை. வாரம் பற்றி மனஞ்சென்ற வழியிலே வீரங்கொண்டு தாமுஞ் செல்லுவர். வாரம் பற்றி வழுவிப்போன செயற்குத் தருமபுத்திரரே தக்க சான்றினராவர். தருமபுத்திரர் நமதரசன் சிசுபாலன் தக்கவனாயிருக்கவும் அக்கிரபூசையை அவனுக்குச் செய்யாமல் வாரம்பற்றி உமக்கே செய்தார். அறிவில்லாத தருமபுத்திரருடைய அங்கீகாரத்தாற் பெருமையும்வருமா? நமதரசன் சிசுபாலன், மனைக்கிழத்தி யாகெனத் தனக்குக் கொடுத்த உருக்குமிணி என்பவளைத் தடுத்து நீர் கவர்ந்த குற்றம் ஒன்று பொறுத்தான். நமதரசன் சிசுபாலன் உமக்குச் சொன்ன நிந்தைகள் நூறு நீர் பொறுத்தீர். கோடி நிந்தைகள் கூடினும் பரதாரங்கவர்ந்த பாவத்துக் கிணையாகுமா? மனைவியைக்கவரவும் வாளாங் கிருந்த பொறுமையாளனை நிந்தைகள் நூறு பொறுத்த நீர் இணையாகி ஒப்பதெப்படி? இப்படியிருக்கவும் பொறுமையாளர் என்று உம்மைப் புகழ்வார் கருத்து என்னை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேகமான நீரின் பெருக்குப்போலச் சேனைகளோடுஞ் சினந்தெழுந்து போரின் பொருட்டு நமதரசன் சிசுபாலன் விரைவில் வருகின்ருன். நீரின் பெருக்குக் கெதிரே நிற்கும் நெடுமரம்போல நிமிர்ந்து நின்று வேரொடுங் கெடாமல், வளைந்து சாய்ந்தெழும்பும் பிரம்பின் கொடிபோல வணங்கி ஒதுங்கி வாழ்வுபெறக் கடவீர். குழந்தைகளைக் காப்பவன் என்று பொருள் கொள்ளும் சிசுபாலன் என்னும் நாம தேயம் பற்றி நமதரசன் குழந்தைகளை மாத் திரங் காப்பவன் என்று கொள்ள வேண்டாம். நம்மரசன் சரண்புகும் பகைவரையுங் காக்கின் ருன்; பிறரையுங் காக்கின்ருன். பொறு மையும் இரக்கமும் பூரணமாயுள்ளவன். பகைவர் குரோதங்களைப் பாரான். நீரும் அவனைச் சரணடைந்து நிலைபெற்று வாழக்கடவீர்.

"கஞ்சன், நரகன், முரன் முதலிய வஞ் சரைக்கொன்ற மகா வீரனுகிய என்னை இந்தச் சிசுபாலன் எப்படிக் கொல்லுவான் என்ருெரு காலும் எண்ணுெதாழியும். சோதிவிட்டிருளைத் தொலைக்குஞ் சூரியனைக் கேது என்னுங் கிரகம் விழுங்குகின்றது. அவனுக்கு நீரொருசரக் கல்லீர். உமது யாதவரும் ஒரு சரக்கல்லர். போரிலே வந்த அரசர் நேரிலே நின்ருலும் பயத்தினுலே அவன் முகத்தைப் பார்ப்பதில்லை. அவனும் அவர் முதுகையன்றி முகத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதில்லை. செருக்களம் புகுந்து புழுதி சேர்தலால் அழுக்கடைந்த அவனுடைய பாதங்கள் நண்ணுவரசர் நாயகிகளுடைய கண்ணீர் மாரியாற் கழுவப்பட்டு, அந்த அரசர்கள் சிரசுகளில் அப்பிய சந்தனம் பூசப்படுகின்றன. அவனுடைய வில்லு வளையும்போதே வணங்காத அரசர் குலமும் வளைகின்றது. சந்திரன் போலத் தண்மையுடையவன் என்று நண்பர்களும், சூரியன் போல வெம்மையுடையவன் என்று பகைவர்களும் அவனை எண்ணுவர்.

"நமதரசன் சிசுபாலன், தனதடிகளிலே முடிகளை வைத்து வணங்குதற் கிணங்காத அரசர் முடிகளிலே, அடிகளை வைக்கின்றான். யானை முதலிய சேனைகள் யாதுமின்றிப் புயங்கள் இரண்டுமே பெரும்படையாக் கொண்டு மருப்பு நான்குடைய மத்தயானை நின்று போராடுஞ் செருக்களத்துக்கும் பலமுறை சென்றுவந்தவன். அந்த யானையை ஊரும் இந்திரனுக்கும் மேலாகி இந்திரனை வென்றவன் எனப் பொருள்படுகின்ற 'அதீந்திரன்' என்னும் பெயர்கொண்டான்! நீரோ இந்திரனுக்குக் கீழாகி இந்திரன் தம்பி எனப் பொருள்படுகின்ற 'உபேந்திரன்' என்னும் பெயர் கொண்டீர். அவனுடைய ஆணை தடைபடுதலின்றி எவ்விடத்திலுஞ் செவ்வே செல்லுகின்றது. அவனுடைய குணங்கள் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுந் திரைகளும் கடலின் திரைகளும் ஓங்கி வருதலால் ஒக்குமாயினும் குணங்களென்னுந் திரைகள் கரை சார்வதும் இல்லை; அழிவது மில்லை. கடலின் திரைகளோ கரைசார்ந்து சார்ந்து கழிகின்றன. பன்றி வடிவங்கொண்டு நின்று பூமியை ஒரு கணப்பொழுது நீர் தாங்கி னீர். அவனோ அதனை நெடுங்காலந் தொடங்கி நீதி வழியில் அடங்கி நின்று தாங்கிவருகின்றான். மிக்கு விளங்குஞ் சூரியகாந்தியோ சக்கரவாள சைலம் வரைக்குஞ் செல்லும். அவனுடைய இராஜகாந்தியோ எம்மலையிலுஞ் செல்லும்! எவரிடத்திலுஞ் செல்லும்! இத்துணை மகத்துவம் பொருந்திய எமதரசன் யுத்தத்திலே உம்மையும் உமது பக்கத்தாரையும் நிச்சயமாகக் கொல்லு வான். உங்களை இழந்த பெண்கள் தங்கள் குழந்தைகளைக் காப்பவர் இல்லை என்று கவலை கொள்வர். அப்பொழுது நமதரசன் அக் குழந்தைகளைப் பரிபாலித்துச் சிசுபாலன் என் னும் பெயரின் பெருமையும் பரிபாலனஞ் செய்வன்" என்று தூதுவன் சொல்லிச் சென்றனன்.

## கோபம் மூளுகை

தூதுவன் சொல்லிய வார்த்தைகளைக் காது களிலே மடுத்த கதன், பலராமன், நிடதன், யுதாசித்து முதலிய கண்ணபிரான் பக்க வீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும், சண்ட வாயுவாலே வீசப்பட்டு மண்டலம் அழியவருங் கடல் போலப் பொங்கி நிமிர்ந்து பொள்ளெனக் கிளர்ந்து, தொடையிலே அடித்து வாயையுங் கடித்துக் கோபங் கொண்டனர். கதன் என்னுங் காவலன் கோருகளை உயர்த்திக் கொம்மென எழுகையிலே, வாகு வலயங்கள் தெறிக்க, வழுவிக் கதுமென வீழ்ந்த பதுமராகம் என்னும் திவ்வியமணியின் செய்ய காந்தி, கோப வெந்தீயின் கொழுந்து போல, எழுந்தது. பலராமர் தமது வெண்ணிற மேனியைக் கோபத்தினாலே செந்நிறமாக்கி, அட்டகாசத்தினாலே முட்ட வெளிப்பட்ட பற்களின் பிரகாசத்தினாற் பின்னும் தமது வெண்ணிறமாக்கினர். தடைபடற்கரிய கடிய கோபங் கொண்ட நிடதன் என்பவன் தக்கன் யாகந் தகர்க்க எழுந்த உக்கிர வீரபத்திர உருத்திரன் போல மிகுத்துவிளங்கினன். இப்படி யாவருங் கோபாவேசராய்ப் போர்த்தொழில் புரிய ஆர்த்தெழுந்தனர். யானை முதலிய சேனைகளும் எழுந்தன. போர்ப்பறையும் பொம்மென முழங்கிற்று.

# போர் புரிகை

கண்ணபிரான் பக்கச் சேனைகளும் சிசுபாலன் பக்கச் சேனைகளும் கடல்போல வந்து தம்முள்ளே கலந்துமிடலொடும் வெம்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைத்தன. பின்னர் இருபக்க அரசர்களுந் தம்முள்ளே கலந்து பெரும் போர் விளைத்தனர். வேணுதாரி என்பவன் வெங்களம் புகுந்து பல ரொடும் போராடிப் பலராமராலே அபசய மடைந்தான். உத்தமமான பெலமுடையவன் எனப் பொருள்படும் உத்தமௌசன் என்பவன் பிரத்தியும்மினன் என்பவனாலே பெலமெலாம் இழந்து தனது பெயர்ப்பொருளையும் இழந்தான். பிரத்தியும்மினனும் "மகா பலமுடையவன்" என்னும் தன் பெயர்ப் பொருளை நிலைப்படுத்தி னான். சாலுவன் என்பவனுடைய சேனைகள் சிநி என்பவனுடைய சேனைகளால் அழிந்தன. இப்படியே இரண்டு பக்கத்தாரும் முரண்டு போராடினர்.

அதன்பின்னர்ச் சிசுபாலன் கண்ண பிரானை வருகென முன்னர்வந்து அறைகூவி னான். கண்ணபிரானுந் தேரிலே சென்று போரிலே நெருங்கினார். சிசுபாலன் வில்லை வளைத்துப் பாணங்களைத் தொடுத்து விடாமழை போலச் சொரிந்தான். கண்ணபிரானும் தமது வில்லினை வளைத்து எண்ணிலவாகிய பாணங் களைச் சிசுபாலன்மேற் செல்ல ஏவினர். அவை களெல்லாம் அணுகி வந்து மார்பிற்பட்ட மாத் திரத்திலே, சிசுபாலன் கலங்கி ஒரு மூர்த்த காலம் ஒரு வார்த்தையுமின்றிப் பெரு மூர்ச்சை யாகி ஒருவாறு தெளிந்து, பேர்த்தும் பாணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பிரயோகித்தான். அவைகளை அக்கணமே கண்ணபிரான், வாதிகூறும் வழியளவை வாக்கியங்களைப் பேதமில்லாத பிறவாக்கியங் கொண்டு நீதியுற நின்று நிராகரித்து வாதிக்கும் பிரதிவாதிபோல, வேறு பாணங்களாற் கூறு படுத்தி வேறு நூறுபாணம் விரைந்து விட்டார். அவைகளையுஞ் சிசுபாலன் அறுத்துத் தொலைத்து மேலும் பாணங்களைவிட்டான். காய்கனல் போலக் கண்ணபிரான் சீறி வாயவ் வியம் ஆக்கினேயம் முதலிய தீயபாணங்களைச் சிசுபாலன் மீது செலுத்தினர். அவைகளையுஞ் சிசுபாலன் அறுத்து நீக்கி மாயமாய் விண்ணிற்போய் மறைந்து நின்று நாநாவித பாணங் களையும் சோனமாரி போலச் சொரிந்தான். அவைகளையுங் கண்ணபிரான் அறுத்து நீக்கி விண்ணிலே தாமும் போய் வெளிப்படாமல் நின்று பல வகையாகிய பாணங்களையும் விட்டார். அவைகளையுஞ் சிசுபாலன் அறுத்து நீக்கினன்.

இப்படியே கண்ணபிரானுஞ் சிசுபாலனும் விண்ணிலே நின்றும், மண்ணிலே நின்றும் எண்ணிலவாகிய படைகளை எடுத்துப் பன்முறை செலுத்திப் பயங்கரமான பெரும்போரை வெகு நேரஞ் செய்தனர். அதன் பின் கண்ணபிரான் இவனை இனிக் கொல்லுதல் கடனாகும் என்று கருதித் தமது திருக்கரத்திலிருந்த சக்கராயுதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் செலுத்தினர். சக்கராயுதம் மிக்க பிர காசத்தொடுஞ் சென்று சிசுபாலனுடைய சிர சைத் துணித்துக் கொண்டுபோய் அண்ட கோளகையுற வீசிவிட்டுக் கண்ணபிரானுடைய திருக்கரத்திலே வந்து சேர்ந்தது. தலைபோன சிசுபாலனுடைய உடலிலே நின்றும் ஒருசோதி தோன்றிச் செங்கதிரையும் பிளந்து போய்த் திரும்பி வந்து எங்கணும் ஒளி பரப்பி மண் ணளந்த கடவுளுடைய மலரடியை மருவிற்று. அதுகண்டு சபையிலிருந்த வேதியர் அரசர் ஆதியர் யாவரும் அதிசயித்தார். தேவர்கள் பூமழை சொரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருஞ்சொற்பொருள்.

அக்கிரபூசை - முதன்மதிப்பு. அக்கிரம்-முதல். பூசை-மதிப்பு.

அசதியாடல்-நகைத்துப்பேசல்.

அசரீரி-ஆகாயவாணி. அ-இன்மை. சரீரி-சரீரமுடையது.

அசாதசத்துரு-தருமபுத்திரர். சத்துரு வில்லாதவர் என்னும்பொருட்டு. அசாத - உண்டாகாத. சத்துரு-பகைவன்.

அசுவமேதம்-அசுவமேதயாகம்.

அட்டகாசம் - பெருஞ்சிரிப்பு.

அடர்ச்சி - நெருக்கம்.

அத்தியயனம் - ஓதுதல்.

அதீந்திரன்-இந்திரனை வென்றவன். அதி-மேல். இந்திரன்.

அந்தணர் - வேதியர். [கை.

அப்பியாசம் - பலமுறை பழகு

அபகாரம் - தீங்கு.

அபசகுனம் - துன்னிமித்தம், அபகேடு. சகுனம்-நிமித்தம்.

அபத்தம் - தீங்கு, தவறு.

அபிமானம் - அறிவு, தனதாக எண்ணல்.

அரசிறை - அரசர் கொடுக்குந் திறை.

அருக்கியம்-நீர் கொண்டு செய்யும் ஒரு வழிபாடு.

அவதானம் - வினைவாயிருத்தல்.

அவதாரம் - பிறப்பு.

அவமதித்தல் - இகழ்தல்.

அவயவம் - உறுப்பு.

அவி-அவிசு, தேவர்க்கு வேள்வியிற் கொடுக்கும் உணவு.

அவித்தை முதலியன - அவித்தை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்பன.

அறிவுவலி - ஆலோசனை யாலாணவலி. இதனை வடநூலார் மந்திரசத்தி என்பார். [தல்.

அறை கூவல் - போருக்கழைத்

ஆங்கிகம்-ஒருவகை நாட்டியம். அது புருவம் முதலிய அங்கத்தை அசைத்துச் செய்வது. அங்க சம்பந்தமுடைமையால் ஆங்கிகம் எனத் தத்திதமாயிற்று.

ஆண்மை வலி - முயற்சி வலி. ஆண்மை - முயற்சி. வலி - இதனை வடநூலார் உற்சாக சத்தி என்பர்.

ஆவசியகம் - அவசியத் தொடு கூடியது.

இரணிய கசிபு - ஓரசுரன். இரணியம் - பொன். கசிபு - உடை.

இராச்சியம் - இராசாவின் ஆளுகைக்குரிய இடம்

இராசியம் - மறைவு. ரஹஸ்யம் என்னும் வடமொழி ஹகர மெய் கெட்டு இராசியம் எனத் தற்பவமாயிற்று.

இராசசூயம் - இராசாக்களாற் செய்யப்படும் ஒரு யாகம். சூயம் - பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கை - ஆசனம்.

இலோத்திரம்-ஒரு மரம்; வெள்ளிலோத்திரம் என்றும் செவ்விலோத்திரம் என்றும் இரண்டு வகைத்து. இதனை இக்காலத்துத் திருமஞ்சனப் பட்டை என்றும் திரவியப் பட்டை என்றும் கூறுவர்.

உக்கிரம் - கடுமை, கோபம்.

உத்தமன் - மிக்க மகத்துவமுடையவன்.

உத்தமௌசன் - துருபதன் மகன், பாரதப்போரிலே பதினெட்டாம் நாளிலே கொல்லப்பட்டவன். உத்தம - மேலான. ஓசன் - வலியுடையவன்.

உத்தவர்-வசுதேவனுடைய தம்பியாகிய தேவபாகன் என்பவனுடைய புத்திரர். இவர் வியாழபகவானுக்குச் சீடர்.

உபேந்திரன் - விஷ்ணு. இவர் வாமனாவதாரத்திலே காசிபருக்கும் அதிதிக்கும் புத்திரராய் இந்திரனுக்குப்பின்னே பிறந்தமையால் உபேந்திரன் எனப்பட்டார். உப-பிட்ட.

உருக்குமிணி - கண்ணபிரான் மனைவிகளிலொருத்தி. இவள் குண்டினபுர அரசனாகிய வீமன் மகள்.

ஊற்றம் - முயற்சி.

எழிலைப்பாலை-ஒரு மரம். இது யானை மதத்தின் மணம் போன்ற மணமுடையது. இதனை வடநூலார் சப்தபர்ணம் என்பர். சப்த - ஏழு; பர்ணம் - இலை.

ஏற்றிழிவு - உயர்விழிவு.

ஐந்தரு-ஐந்து மரங்கள்; அவை; சந்தானம், அரிசந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பன.

ஒளியிருத்தல்-மறைந்திருத்தல். ஒளி - மறைவிடம்.

ஒற்றர்-அரசர்க்குரிய ஐம்பெருங்குழுக்களுள் ஒருவர். அவர் மறைந்து சென்று இரகசியங்களை ஆராய்வோர். ஒற்று-ஆராய்தல். அர்-ஒரு விகுதி.

ஓம்-உடன்பாட்டினைக் காட்டும் ஒருவடமொழி இடைச்சொல்.

கஞ்சன் - உக்கிரசேனனுடைய மகன். கண்ணபிரானுக்கு மாதுலன்.

கடன் - முறை.

கடிதல் - கண்டித்தல்.

கடுப்பு - உறைப்பு.

கண்ணபிரான் - கிருஷ்ணர், கண்ணன் என்பது கிருஷ்ணன் என்பதன் தற்பவம். கண்ணன் - கிருஷ்ணன். பிரான் - தலைவன். [தம்பி.

கதன் - கண்ணபிரானுடைய

கம்பளமா - மலையாட்டுக்கடா.

கருத்து - கருதியது.

களிற்றியானை - ஆண் யானை.

காண்டவம் - ஒருகாடு. இந்திரப்பிரத்த நகரிக்கு அருகிலுள்ளது; இந்திரனுக் குரியது.

காதுதல் - கொல்லுதல்.

கார்த்தவீரியன் - யது குலத்திலேவந்த கிருதவீரியன் என்பவனுடைய மகன். தத்தாத்திரேய முனிவருடைய அரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளினாலே ஆயிரங்கை யுடைதல் முதலிய வரங்களைப் பெற்றவன். இராவணனைக் கயிற்றினாற் பிணித்துத் தன் நகர்க்குக்கொண்டுவந்தவன்.

கார்ப்பருவம் - அறுவகைப் பருவங்களுள் ஒன்று. அஃது ஆவணி, புரட்டாசி மாதங்கள் இரண்டு.

காரகில் - கரிய அகில்.

காரியம் - செயல்.

காலயவன் - ஓரசுரன்.

கிருஷ்ணன் - வசுதேவன் மகன். விஷ்ணுவினவதார புருடன்.

கிலேசம் - துன்பம்.

குருக்கத்தி - மாதவிக்கொடி.

குரோதம் - வெகுளி.

கெம்பீரம் - ஆழம்.

கெம்பீர வேதி - ஒருவகை யானை. அது தோலைக் கிழித்து இரத்தம் பெருகும்படி செய்தாலும் உணராத மதச் செருக்குடையது.

கொறுகொறுத்தல் - கோபித்தல்

கோகு - புயம்.

கோட்டுமண் கொளல் - யானை முதலியன கொம்பினாற் குத்தி மண்ணெடுத்தல்.

கோபுரம் - நகர வாயில்.

கௌரவம் - மேன்மை. இது குரு என்பவன் அடியாக வந்த தத்திதம். குரு - பாரம்

சகடாசுரன் - கஞ்சனால் ஏவப்பட்டுக் கண்ணபிரானைக் கொல்லும்படி சகட வடிவமாய் வந்த ஓர் அசுரன். சகடம் - வண்டி.

சங்கநாதம் - சங்கினொலி.

சடலம் - உடம்பு.

சண்டாளர் - துரோகிகள்.

சத்தமர் - பெரியோருள்ளே மிக்கவர். சத்து - பெரியோன். தமம் - உயர்ச்சியைக் காட்டும் ஒரு விகுதி.

சத்தியபாமை - கண்ணபிரான் மனைவிகளிலொருத்தி. இவள் நக்கினசித்து என்பவன் புத்திரி.

சதாசாரம் - நல் லொழுக்கம். சத் + ஆசாரம். சத்து - நன்மை. ஆசாரம் - ஒழுக்கம்.

சந்தி - நட்பாகுகை.

சாத்தகி - விருஷ்ணி மரபிலே வந்த சத்தியகன் என்பவன் புத்திரன். இது சத்தியகன் என்பதடியாக வந்த தத்திதம்.

சாத்துவிசம் - ஒருவகை நாட்டியம். அது மனம் முதலியவை கொண்டு செய்யப்படுவது. சத்துவம் - மனம்.

சாலுவன் - யாதவர்க்கு மாறுபுள்ள ஓர் அரசன். சிசுபாலனுக்குத் தம்பி என்பர்.

சிங்காரித்தல் - அலங்கரித்தல்.

சிறிய சிந்தையர் - மூடர்.

சிப்பிரம் - கண்ணபிரானுடைய தேர். இஃது எத்திசையிலுஞ் செல்லும் இயல்புடையது.

சீரியர் - பெரியோர்.

சுவாத்தியம் - ஆரோக்கியம். இது சுவத்தம் என்பது அடியாக வந்த தத்திதம். சுவத்தம் - நன்னிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரம் - சுருக்கமான எழுத்துக்களாற் செய்யப்பட்டுப் பெருக்கமான பொருள்களை அறிவிக்கும் நூற்பா.

சேடன் - அனந்தன் என்னும் பாம்பு.

சைத்தியன் - சிசுபாலன். இது சேதி என்பது அடியாக வந்த தத்திதம்.

தக்ஷிணை - யாக முடிவிலே புரோகிதர்க்குக் கொடுக்கும் திரவியம்.

தகவு - தகுதி.

தத்தாத்திரேயன் — அத்திரி முனிவருடைய புத்திரன். இவன் மும்மூர்த்திகளாலும் அத்திரி முனிவருக்குக் கொடுக்கப்பட்டவன். தத்த - கொடுக்கப்பட்ட. ஆத்திரேயன் - அத்திரி முனிவர் புத்திரன்.

தமகோஷன் - சந்திர குலத்துள்ள ஓர் அரசன்.

தலைக்கீடு - ஒன்றன் செயலைக் கபடமாய் ஒன்றின்மேலேற்றிச் சொல்லுதல். வியாஜம்.

தார தம்மியம் - உயர்விழிவு. இது தாரதமம் என்பது அடியாகவந்த தத்திதம். தரம் - உயர்வு. தமம் - தாழ்வு.

தாழி - மிடா.

துயிலெடைநிலை - அரசருடைய துயிலை எழுப்பும் பொருட்டுச் சூதராற் பாடப்படும் பாட்டு. சூதர் மங்கலப் பாடகருள் ஒரு வகையார்; அவர் நின்றேத்துவார். துயில்-நித்திரை. எடை - எழுப்புதல். நிலை - நிற்பது.

துரோகம் - கேடு.

தேவகி-தேவகன் மகள். இவள் உக்கிரசேனனால் வளர்க்கப் பட்டவள்.

தோலடிப் பறவை - அன்னம்.

நரகாசுரன் - வராகாவதாரத்திலே விட்டுணுவுக்கும் பூமிதேவிக்கும் பிறந்த புத்திரன். கண்ணபிரானாற் கொல்லப் பட்டவன்.

நாட்டியம் - கூத்து.

நாராயணன் - விட்டுணு.

நாரதர் - தேவ முனிவருள்ளே ஒருவர். இவர் பிரமாவின் மனத்திலே தோன்றினவர்.

நால்வகை யுபாயம் — நான்கு வகையான உபாயம். அவை: இன்சொல், வேறுபடுத்தல், கொடுத்தல், ஒறுத்தல், என்பன.

நிட்டூரம் - கொடுமை.

நெடுநீர் - விரைந்து செய்வதை நீட்டித்துச்செய்யுந் தன்மை. இதனை வடநூலார் தீர்க்க சூத்திரதை என்பர். தீர்க்கம் - நெடுமை. சூத்திரம் - கயிறு. தா - தன்மை.

நொதுமல் - அயல்.

பகவான் - கடவுள், குரு. பகம்- ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, அறிவு, பற்றின்மை என்பன. வான் - ஒருவிகுதி.

பட்டவர்த்தனர் - பட்டம் நிலை பெற்ற அரசர்.

படமாடம் - கூடாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவீடு - படமாடம்.
பாதகண்டம் - அக்கினீத்திரனற் பாதனுக்குக் கொடுக்கப் பட்ட பூமியின் பிரிவு. அஃது இமயத்துக்குத் தென்கடலுக் கும் இடையிலுள்ள பூமி, பர தன் - அக்கினீத்திரன் மகன் கண்டம் - பிரிவு.
பரதாரம் - பிறன் மனைவி.
பரமாத்துமா - கடவுள். பரம - மேலான. ஆத்துமா.
பராக்கு - வேறொன்றிற் கண் ணயிருக்கை. பரா - எதிர். அக்ஷ - கண்.
பரிதாபம் - கவலை.
பரிபாலித்தல் - காத்தல்.
பரிகரித்தல் - அழித்தல்.
பரீக்ஷை - முற்ற ஆராய்ந்து பார்த்தல், பரி - சூழ. ஈக்ஷை - பார்த்தல்
பாடிவீடு-பகைமேற்சென்றோர் உறைவிடம்.
பாண்டவர் - தருமன் முதலிய ஐவர். இது பாண்டு புத்திரர் எனப்பொருள் படுந் தத்தி தம்.
பார்த்திபன் - அரசன். இது பிருதிவி என்பது அடியாகப் பிறந்த தத்திதம்.
பாவனை - எண்ணம்.
பாளயம்-பகைமேற்சென்றோர் உறையுமிடம்.
பிரத்தியும்மினன் - கண்ணபிரா னுடைய மகன்.
பிரதிவாதி - வாதி கூறிய பக்க த்தை மறுத்துரையாடு வோன்.
பிரியங்கு - ஒருகொடி; ஞாழல் என்பர். புரோகிதன் - குரு.
புனைந்துரை - அலங்கரித்து உப சாரமாகக் கூறும் உரை.
பெருக்கம் - வளர்ச்சி.
பெருமைவலி - பெருமையா லாய வலிமை. இதனை வட நூலார் பிரபுசத்தி என்பர்.
பேரவமானம் - மிக்க இகழ்ச்சி.
பொல்லாங்கு - தீங்கு.
போது - மலரும் பருவப் பூ.
மங்கல பாடகர் - மங்கலமான துதிகவி பாடுவோர். மங்க லம் - நன்மை. பாடகர் - பாடுவோர்.
மடமகன் - மூடன்.
மதுகைடபர் - விஷ்ணுவி னு டைய செவித் துவாரத்திலி ருந்து பிறந்த இரண்டசுரர்.
மருப்பு - கொம்பு.
மாயம் - கபடம்.
மாவலி - ஓரசுரன். இவன் விரோசனுக்குப் புத்திரன்; பிரகலாதனுக்குப் பௌத்தி ரன்.
மிகை - அளவின்மிக்கது.
மிடல் - வலி.
மித்திரர் - நண்பர்.
மிருகராசன் - சிங்கம்.
முக்கியம் - தலைமை.
முட்ட - முழுவதும்.
முதுவேனில் - அறுவகைப் பரு வங்களுள் ஒன்று. அஃது ஆனி ஆடி என்னும் மாசம் இரண்டு.
முரன் - நரகாசுரன் மந்திரிக ளில் ஒருவன்.
முற்றுகை - வளைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றூட்டு - முழுவதும் அநுப விக்க விடப்பட்ட நிலம். முற்று - முழுவதும். ஊட்டு - உண்பிப்பது.
மூகை - ஊமை.
மூதாளர் - வயோதிகர்.
மூதுளர்தல்-பழமையுறுதல்.
மூர்ச்சை - மயக்கம்.
மூவகைப்பேறு - மூன்றுசித்தி கள். அவை மந்திர சித்தி, பிரபு சித்தி, உர்சாக சித்தி என்பன.
யது - யயாதி என்பவனுக்குத் தேவயானையிடம் பிறந்த புத் திரன்.
யாகம் - வேள்வி.
யாதவர் - யது என்பவனுடைய மரபிலுள்ளவர்.
யூகம் - ஆராய்தல்.
யோகம் - தியானம்.
வகையற வெண்ணல் - வகை முழுவதையும் எண்ணல். வகை - பிரிவு. அற-முற்றாக.
வங்கு - குகை.
வசதி - வீடு.
வடு - பிஞ்சு.
வசுதேவன் - சாருகதேச ராச னாகிய சூரசேனன்புதல்வன், வசு-திரவியம். தேவன்-விளை யாடுவோன்.
வப்புரு - யாதவருளொருவன்.
வலாற்காரம் - வன் செயல். வலாத் - வலிமையால். காரம் - செயல். [டம்.
வாக்கியம் - சொற்களின் கூட்
வாகுவலயம் - தோளணி
வாசாலகர் - பேச்சில் வல்லவர்.
வாயவ்வியம் - வாயு பாணம். இது வாயு என்பதடியாக வந்த தத்திதம்.
வாரம் - அன்பு.
வாருடபருவம் - விடபருவன் என்னும் அரசனுடைய நக ரம், இது விடபருவன் என் பது அடியாகவந்த தத்திதம்.
விசயம் - வெற்றி.
விடை - விடுத்தல்.
வித்தாரம் - விரிவு.
விண்மீன் - நட்சத்திரம்.
விருக்ஷம் - மரம்.
விருத்தியுரை - விரிவுரை.
விற்பன்னம் - வன்மை.
வீக்குதல் - வளர்த்தல்.
வீட்டுமர் - சந்தநுவின் குமாரர்.
வீரியம் - வீரத்தன்மை.
வெங்களம் - போர்க்களம்.
வெட்டெனவு - கடுமை.
வேண்டூட்டு - விரும்பிய உணவு. வேண்டு - வேண்டிய. ஊட்டு - உணவு.
வேதியர் - பிராமணர்.
வேணுதாரி - நரகாசுரன் புதல்வன்.
வைரம் - செடுங் கோபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதாரணச் செய்யுளுரை

1. "எற்றெழு வன்னிமே......" பக். 8

இ - ள்: எற்றெழு வன்னிமேல் - (எதிர்த்து) மிகுத்தெழு கின்ற அக்கினியின்மேல், இனிது துஞ்சலாம் - நன்கு துயி லலாம், தோற்றிய கடுவிடமெனினும் துய்க்கலாம் - (விஷ சேர்தலக்களால்) உண்டாகிய கொடிய விடமாயினும் அனுபவித் திருக்கலாம், மாற்றல ரலேத்திட வந்த வெந்துயர் - பகைவர் துன்புறுத்தலால் வந்த கொடிய துயரத்தை, ஆற்றரிது; ஆற்ற ரிது - ஆற்றுதல் மிகவரிது, இப்புன்மை அலம் - இத் துன்பம் போதும், (பரிதாபம்)

(பகைவர் துன்புறுத்தலால் வருந் தீங்கு மிகக் கொடிய தென்றபடி)

2. "வகையறச் சூழா......." பக். 9

இ - ள்: வகையறச் சூழாதெழுதல் - சென்றால் நிகழும் திறங்களையெல்லாம் முற்ற எண்ணாது சில எண்ணிய துணை யானே அரசன் பகைவர்மேற் செல்லுதல், பகைவரைப் பாத்திப் படுப்பதோராறு - அப்பகைவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வதொரு நெறியாம்.

(பகைவர்மேற் செல்லுங்கால் ஆராய்ந்து செல்லவேண்டும் என்பதாம்)

3. "இனந்தரு சந்திவி........" பக். 10

இ - ள்: இனந்தரு சந்தி - பொருந்திய சந்தியும், விக் கிரகம், யானம், ஆசனம், துவைதம், ஆச்சிரயம் என்னும் - பகை யாகலும், மேற்சேறலும், இருத்தலும், பிரித்தலும், சார்தலும் என்று பகுக்கப்பட்ட, மனந்தரு குணங்கள் ஓராறும் - மனத் தால் தரப்படும் ஆறு குணங்களும், வல்லகோ - வல்லுகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய அரசன், அனந்த பூபாலர்கட் காசனுவன் - அள விடற்கரிய புவியரசர்களுக்கு அரசனுவான், (அரசர்கட்கரசன் - சக்கரவர்த்தி) சந்தி - நட்பாக்கல்.

(பஞ்ச உபாயங்களையும் அறிந்தவனே நல்லரசனுவான்.)

4. "நெடுநீர் மறவி......" பக். 11

இ - ள்: மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும், விரைந்து செய்வதனை, நீட்டித்துச் செய்யுமியல்பும், மறப்பும், துயிலுமாகிய இந்நான்கும், கெடுநீரார் காமக்கலன் - இறக்கு மியல்பினையுடையார் விரும்பியேறு மரக்கலம்.

5. "சிறிய பகையெனினு... ..." பக். 12

இ - ள்: சிறிய பகையெனினும் - சிறிய பகையாயினும், ஓம்புதல் தேற்றார் - (அதனால் ஆம் துன்பத்தை) பாதுகாத்தலை அறியாதார், பெரிதும் பிழைபாடுடையர் - மிக்க பிழைபடுதலை உடையராவர், நிறைகயத்துஆழ்நீர் மடுவில் தவளைகுதிப்பினும் - நீர் நிறைந்த குளத்தின்கண் உள்ள ஆழமான நீர்க் (குண்டு) குழி யில் தவளை குதித்தாலும், யானைநிழல் காண்பரிது - பெரிய யானையினது நிழலைக் காண்டல் அரிது.

(தவளை குதித்தல் சிறுபகைக்கு எடுத்துக்காட்டாயிற்று.)

6. "மெய்வருத்தம் பாரார்......." பக். 16

இ - ள்: கருமமே கண்ணாயினர் - காரியத்திற் கண்ணு யிருப்பவர், மெய்வருத்தம் பாரார் - உடம்பினது வருத்தத்தை யும் நோக்கார், பசிநோக்கார் - பசியை (ஆற்றும் உணவினை) நோக்கார், கண் துஞ்சார் - நித்திரையாதலும் செய்யார், எவ் வெவர் தீமையும் மேற்கொள்ளார் - பகைவரா லுளதாகுந் தீமை யையும் (பொருட்படுத்திக்) கொள்ளார், செவ்வி அருமையும் பாரார் - காலத்தின் கழிவினையும் (வேறுபடுத்தி) நோக்கார், அவ மதிப்புங் கொள்ளார் - பிறர் நிந்தை செய்தலையும் நோக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. "பொன்னி னாகும்......." பக். 17

இ - ள்: பொன்னின் பொருபடை ஆகும் - பொருளால் பொருகின்ற படைஆகும், அப்படை தன்னில் தரணியாகும் - அப்படையால் பூமி அகப்படும், தரணியிற் பின்னைப்பெரும் பொருளாகும் - அப்பூமியால் பின்னை பெரியபொருளாகும், அப்பொருள் துன்னுங்காலை துன்னாதனவில்லை - அப்பொருள் கிடைக்குமளவில் கிடையாதன ஒன்றுமில்லை (வீடும் கிடைக்கும் என்றபடி )

8. "மந்திரம் பிரபுவுற்......." பக். 18

இ - ள்: மந்திரம், பிரபு, உற்சாகமாம் வல்ல மூர்த்தறு சத்திகள் மூன்றும் - ஆலோசனைவலி, பெருமைவலி, முயற்சி வலி ஆகிய வல்லமைபொருந்திய மேலான மூன்றுசக்திகளையும், அது தந்திடு சித்தியும்-அச்சத்திகள் தருகின்ற (மந்திரசித்தி, பிரபு சித்தி, உற்சாகசித்தி என்னும் மூன்று) பேறுகளையும், தரிக்கும் மன்னவற்கு - பொருந்திய அரசனுக்கு, எந்தமாநிலம் எய்திடாத- எந்தநில அரசாட்சி எய்தாதன (எல்லாத் தேசத்தையும் அரசா ளுவான் என்றவாறு.)

(எந்த மாநிலம் என்றது, ஈண்டுப் பூமியின் பகுதிகளை )

9. "வாய்மைதப்பி னார்களிந்த......." பக். 22

இ - ள்: வாய்மை தப்பினார்கள் - வாய்மை தவறியவர்கள், இந்த மாநிலத்தில் - இந்தப் பெரிய பூமியில், மேலுளோர் பழிக்க ஈனராய் தீமையுற்றுத் திரிந்து - பெரியோர் பழிக்க நீசராகித் தீமைகளைப் பொருந்தி யுழன்று திரிந்து, பின் தூய்மையற்ற கும்பியுள் துளைந்து - மறுவுலகத்தில் தூய்தல்லாத கொடியநரகத் துன்பத்திலுள் மூழ்கி, அழுங்குவார் என - வருந்துவார்கள் என்று, ஆய்மனுப்பகர்ந்த - ஆராயப்படுகின்ற மனு முதலிய நீதி சாஸ்திரங்கள் தெரிவித்தன, வேதசாகை முற்றுமறையும் - வேதசிரசாகிய உப நிஷதங்களும் கூறும்.

(வாய்மைதப்பினார்க்குறுங் கேடுகள் அளவிலவென்பது கூறியவாறு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "தோளொடு தோண்முட்டத்......" பக். 25

இ - ள்: தோள் தோளோடு முட்ட - தோள்கள் தோள்களோடு பொருந்தவும், தொடை தொடையொடு முட்ட - தொடைகள் தொடைகளோடு பொருந்தவும், தாள் தாளொடு முட்ட - பாதங்கள் பாதங்களோடு பொருந்தவும், தலைதலையொடு முட்ட - தலைகள் தலைகளோடு பொருந்தவும், ஆள் ஆளொடு முட்ட - ஆட்கள் ஆட்களோடு பொருந்தவும், நீள் ஒளி மணிவீதி - மிக்க ஒளியினையுடைய அழகிய வீதியின்கண், சனம் நிரந்தரித்தன - சனங்கள் நெருங்கின.

(அந்தரம் - இடை; நிர் அந்தரம் - இடைவெளியின்மை.)

11. "தள்ள ரும்பாரந்......" பக். 30

இ - ள்: தள்ளரும் பாரந்தாங்கிய ஒட்டகம் - இறக்குதற்கரிய (பாரமான) பொதிகளைத் தாங்கிய (சுமந்த) ஒட்டகங்கள், தெள்ளுதேம் குழை யாவையும் தின்கில - தெளிந்த இனிய தளிர்கள் எவற்றையும் தின்னாதனவாய், கைப்பனதேடி - கைக்கின்ற வேப்பிலை முதலியவற்றைத் தேடி, கள் உண் மாந்தரில் - கள்ளைப்பருகும் மாந்தரைப்போல, உள்ளமென்னத் தம் வாயும் உலர்ந்தன - தம் நெஞ்சு உலர்ந்தாற்போல வாயும் உலர்ந்தனவாயின.

(கசப்பான பொருளை உண்டல் மாத்திரையன்றி, நெஞ்சும் வாயும் உலர்தலிலும் ஒட்டைகள் கள்ளுண்மாந்தரை ஒத்தன என்றபடி)

12. "உம்மாலின் றருவினையே......" பக். 37

இ - ள்: அருவினையே னின்றும் மாலுயிர் பிழைத்தேன் - தீவினையேன் இன்றைக்கு உங்களுதவியால் சாவாது தப்பினேன், நீர்தந்த உயிர்க்கு வேறோர் கைமாறில்லை - நீர்தந்த உயிர்க்கு வேறொரு பிரதியுபகாரமுமில்லை, குருகுலம்போல் வேறெக்குலமும் காக்குகிற்பீர் - குருகுலத்தைக் காப்பதுபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றெக்குலத்தையுங் காக்கின்றவரே! தெவ்மாற உலகாளும் செங்கோன்மைக குருபதிக்கு - பகைவரிலாக உலகத்தை ஆளுகின்ற செங்கோலையுடைய குருகுல மன்னனுக்கு, சிற்பம் வல்லோர் அம்மாவென்றதிசயிப்ப - சிற்ப சாஸ்திரத்தில் வல்லவர்கள், அம்மா! வெனச் சொல்லி ஆச்சரியமடையும்படி, அரிய மணிமண்டபமொன்றமைக்கின்றேன் - செய்தற்கரிய இரத்தின மண்டபமொன்றை ஆக்குகின்றேன்.

13. "மேனாளிவ் வுலகாண்ட......." பக். 38

இ – ள்: அசுரகுல வேந்தர் வேந்தன் - அசுரகுல சக்கரவர்த்தியாகிய, மேனாள் இவ்வுலகாண்ட விடபருவன் - முன்னாளில் இவ்வுலகத்தை ஆண்ட விடபருவன் என்பவன், ஆண்மையுடன் தரியலரைப் பொருது - பராக்கிரமத்தோடு பகைவரைப் போர்செய்து வென்று, திறைகொணர்ந்த - திறையாகக் கொண்டுவரப்பட்ட, தாராபந்திபோல் நாளும் ஒளிவீசும் பல மணிகள் - நட்சத்திரக் கூட்டம்போல எந்நாளும் ஒளி வீசுகின்ற பலவகை இரத்தினங்கள், விந்து எனும் பொய்கை தன்னில் - விந்து என்று சொல்லப்படுகின்ற தடாகக்கரையில் உள்ள கோட்டையில், ஆளுமற் கிடப்பன உண்டு - அளவின்றிக் கிடப்பன உண்டு, அவை இதற்கே உபகாரணமாகும் என்றான் - அவ்விரத்தினங்கள் ஆக்கக் கருதும் இம்மண்டபத்திற்கே உபயோக காரணமாகும் என்றான்.

(கோட்டையிலுள்ள மணிகளைத் தடாகத்திலிருப்பதாகக் கூறியது, கங்கையின்கண் இடைச்சேரி யென்றாற் போல்வதொரு இலக்கணை பற்றியென்க.)

14. "பூபால ரவையத்து......." பக். 50

இ – ள்: காபாலி முனியாத வெங்காமன் நிகரான கவினெய்தி - பிரமகபாலம் தரித்த சிவபெருமானாற் கோபித்து எரிக்கப்படாத, விரும்பப்படும் மன்மதனுக்குச் சமமான அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்து, எழ்தீபால் அடங்காத புகழ்வீரம்கயம் அன்ன சிசுபாலன் - எழுதீவுகளாலும் அடக்கப்படாத மிக்க புகழையுடைய வலிமை மிக்க யானையை ஒத்த சிசுபாலன், பூபாலர் அவையத்து முற்பூசை பெறுவார் - அரசசபையிலே அக்கிரபூசை பெறத்தக்கவர், புறம்கானில் வாழ்கோபாலரோவென்று - முல்லை நிலத்தில் வசிக்கின்ற இடையர்களா என்று, அங்கு உருத்து அதிர்த்து கொதித்து ஒதினன் - அவ்விடத்துக் கோபித்து ஆரவாரித்து மனம் புழுங்கிக் கூறினன்.

15. "சூரன் குலத்தோர்......." பக். 51

இ - ள்: சூரன்குலத்தோர் - சூரிய வம்சத்தவரும், குபேரன்குலத்தோர் - சந்திரவம்சத்தவரும், சுடர்ப்பாவகப் பேரன் குலத்தோர் முதலோர் - ஒளிபொருந்திய பாவகன் என்னும் பெயருடைய அக்கினி வம்சத்தவரும் முதலான, பெயர்பெற்ற பேர் இருந்தார்கள் - கீர்த்திபெற்ற அரசர்கள் வந்து இருந்தார்கள் (அவர்களிருக்கக் கிருஷ்ணனுக்கு அக்கிரபூசை செய்ய எண்ணுவது), வீரம் கொலோ - அவனிடத்தில் உள்ள வீரத்தாலோ, வாகுசாரம்கொலோ - புஜபலத்தாலோ, செல்வமிச்சம் கொலோ - செல்வமிகுதியினாலோ (அல்லது), பூர் அம்புராசிப் புவிக்கு - நிறைந்த சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமிக்கு, என்றும் முதுவோர்கள் பொதுவோர் கொலோ - எக்காலும் பெரியவர் இடையர்களோ?

(கண்ணனை இடையனென்று சிசுபாலன் இழிவாகக் கூறினன்.)

16. "வாரம் பட்டுழித்......." பக். 51

இ - ள்: வீரவேல் நெடுங்கண்ணி - வீரம் பொருந்திய வேல்போலும் நெடிய கண்களையுடைய கனகபதாகை, வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம் - ஒருவனிடத்து அன்புபொருந்திய இடத்து அவர் செய்யும் தீயனவும் நல்லனவாம்; தீரக் காய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழி நல்லவும் தீயவாம் - மிகக் கோபித்த இடத்து அவர் செய்யும் நல்லனவும் தீயனவாம், வையத்தியற்கையன்றே - இது பூமியில் உள்ளார்க்கு இயல்பல்லவா? ஒரும் என - இதனை நீர் நும்மில் ஆராய்ந்துபாரும் என்று, விளம்பினன் - கூறுவாராயினன்.

17. "அண்டர்க் கெல்லா......." பக். 56

இ - ள். அண்டர்க்கெல்லாம் அரசான ஆகண்டலனுக்கு - தேவர் எல்லோருக்கும் தலைவனான இந்திரனுக்கு, இனிதுண்டற்கு அண்டர் அமைத்தபால் அடிசில் - நன்குபுசிக்க இடையர்கள் ஆக்கிப்படைத்த பாற்சோற்றை, ஒருநாள் ஒருதானே உண்டான் - அவ்விந்திரனுக்காக்காது ஒருநாள் தான் தனியே உண்டான், கொண்டல் கண்மாரியை - மேகங்கள் சொரிந்த கல்மழையை, சண்டப்பிரசண்டவேகமுடன் - மிக்க விரைவான பெரும் காற்றோடும், முன்னம் - முன்னாளில், கோவர்த்தனமே குடையாகத் தடுத்தான் - கோவர்த்தனகிரியையே குடையாகக் கொண்டு தடைசெய்தான், எறுபடுத்தான் - இடபத்தைக் கொலைசெய்தான்.

18. "கஞ்சனெனு மாமனொடு......." பக். 56

இ - ள்: கஞ்சன் எனும் மாமனொடு காளை அமர் விளைத்தான் - கஞ்சன் என்னும் பெயரையுடைய மாமனொடு காளைப் பிராயத்துப் போர்செய்தான். வஞ்சனையினால் அமரும் எத்தனை மலைத்தான் - வஞ்சனையால் போர்களும் பல (எவ்வளவோ) செய்து முடித்தான், தஞ்சமெனவே மருவுதமரில் - ஆதாரமாகத் தன்னைவந்து அடைந்திருக்கின்ற சுற்றத்தாரில், ஒரு தானே மிஞ்சி - ஒப்பற்ற தானே உயர்ந்து, உரியமேதினி விரகால் புரந்தான் - தனக்கும் சகோதரர்க்கும் உரிய பூமியை வஞ்சனையால் அரசாளுகின்றான்.

(புரந்தான் காலவழுவமைதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. "எழுச்சிக்கட் பிற்கூவார்........" பக். 60

இ - ள்: எழுச்சிக்கண் பிற்கூவார் - எழுந்து செல்லுமிடத்துப் பின்னின்று அழையார், தும்மார் - தும்முதலைச் செய்யார், வழுக்கியும் எங்குற்றுச் சேறிர் என்னார் - தவறியும் 'எங்கு செல்கின்றீர்' என்று வினவார், முன்புக்கு எதிர்முகமாநின்றும் உரையார் - முன்னே சென்று எதிர்முகமாக நின்றும் உரையாடார், இருசார்வும் (உரைப்பர்) (ஒன்றுரைக்க வேண்டின்) அவர்க்கு இருமருங்கும் நின்றுசொல்வர், குரவர் வலங்கொள்வர் - தங்குரவர் போம்பொழுது வலங்கொண்டு போவர்.

(ஆசார நெறியறிந்தார் செயல்கள் கூறப்பட்டன.)

20. "பிறர்மறை யின்கட்......" பக். 62

இ - ள்: பிறர்மறையின்கண் செவிடாய் - (ஒருவன்) பிறாது இரகசியத்தைக் கேட்பதில் செவிடனும், திறனறிந்து - (தனக்குவரக்கடவதாகிய துன்பத்தின்) கூறுபாட்டையறிந்து, ஏதிலார் இல்கண் குருடனாய் - அயலாரது மனைவியரை (விரும்பி)க் காண்பதில் குருடனும், தீய புறங்கூற்றின் மூகையாய் - தீமையை விளைப்பதாகிய புறங்கூறுவதில் ஊமையாயும், நிற்பானேல் - (பொருந்தி) ஒழுகுவானாயின், அவற்கு - அவனுக்கு, யாது அறமும் கூறவேண்டா - எவ்வறங்களையும் கூறவேண்டுவதில்லை.

(மேற்கூறிய செயல்களே அறமாக அமையும் என்றவாறு.)

21. "கூர்த்துநாய் கவ்விக்......" பக். 62

இ - ள்: நாய் கூர்த்து கௌவிக்கொளக் கண்டும் - நாயானது சினமிகுந்து கடிக்க (அதனை)க் கண்டிருந்தும், பேர்த்துத் தம் வாயால் நாய் கௌவினார் - பெயர்த்துத் தமது வாயினால் நாயைக் கடித்தவர், ஈங்கு இல்லை - இவ்வுலகத்தில் இல்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்மக்கள் - கீழோர், சீர்த்தன்றிக் கீழாய சொல்லியக்கால் - தகுதியுடைய சொற்களை யொழித்துத் தகுதியற்ற சொற்களைச் சொல்லியவிடத்து, மேன்மக்கள் மீட்டுத் தம் வாயால் சொல்பவோ - மேலோர் பெயர்த்துத் தமது வாயினாற் (கெட்ட சொற்களைச்) சொல்லுவார்களோ? (சொல்லார் என்றபடி.)

22. "சடமதைக் கழுவ......." பக். 63

இ - ள்: மடமையால் தன்னைத் தானே புகழுவோன் - அறியாமையினாற் றற்புகழ்ச்சி செய்வோன், வகைகளெல்லாம் படவி எடுத்துரைக்க - (தனது) வகைகளெல்லாவற்றையும் புவியி லுள்ளவர்கள் எடுத்துச் சொல்ல, சடமதைக் கழுவ உன்னி சகதியில் தோய்தல்போலும் - சரீரத்தைச் சுத்தஞ் செய்ய நினைத்து சேற்றில் தோய்தல்போலவும், சுடரினைத் தூண்ட வேண்டி ஊதித் தொலைத்தல் போலும் - விளக்கினைத் தூண்ட விரும்பி ஊதி அவித்தல் போலவும், நிந்தை பூணுவன் - இகழ்ச் சியைப் பொருந்துவான்.

(தற்புகழ்ச்சி செய்வோன் தானே நிந்தையைப் பூண்பான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-624-5901-29-6

Pirnt By - Mathi Colours, Nallur. 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org